தென்மொழி

தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

சுவடி: 7
ஓலை: 5, 6.
விலை 75 காசு.

உருப்படி யாகாதடா–தமிழகம்
உருப்படி யாகாதடா–தமிழா
உருப்படி யாகாதடா!

தெருப்படி யிறங்கினுல் குலமதத் திருட்டுகள்;
திரிவோர்தம் வாயெலாம் அரசியல் புரட்டுகள்!
நெருப்படி வாழ்க்கையில் ஏழையர் வாட்டங்கள்!
நிலையற்ற போக்குகள்! சோற்றுத்திண் டாட்
டங்கள்! (உருப்படி)

கயவரும் கள்வரும் காசடிக் கின்றூர்:
கரவினுல் தொண்டர்கள் போல்நடிக் கின்றூர்!
நயமிகு நாடக விளம்பர உரைகள்!
நாளுக்கு நாள்மிகும் ஒளிப்படத் திரைகள்!
(உருப்படி)

அறிஞர்கள் வறுமையில் வாடுவர் இங்கே,
அறிவுநூல் செய்வதும் உரைப்பதும் எங்கே?
நெறிகளும் முறைகளும் செல்வர்கால் செருப்பு;
நேர்மையர் வாழ்க்கையோ மெழுகு; கீழ் நெருப்பு!
(உருப்படி)

அரசியல் விரகுகள் ஆயிரங் கோடி!
ஆரவா ரங்கட்கே மாடிமேல் மாடி!
முரசறைந் தென்பயன் விடுதலை நாடி?
முனைபவர் குலைவதோ நாட்குநாள் வாடி?
(உருப்படி)

பெண்டிர்க் கிலைபெண்மை; ஆண்கட்கே தாண்
[மை?
பிழைப்பதற் கெனில்விடு வார்மன நாண்மை!
தொண்டுசெய் வார்வினை, செயல்முற்றும் பொய்ம்
[மை!
தொகைவரு மென்னிலோ புதைப்பர்தம் மெய்ம்
[மை; (உருப்படி)

உரமில்லை நெஞ்சினில், தமிழர்க்கிந் நாளில்!
ஊராளும் துடிப்பில்லை அவர்தூம்பல் தோளில்!
மரமென உணர்விழந் தார்! மறங் கெட்டார்;
மானத்தை என்றைக்கோ கொட்டாவி விட்டார்!
(உருப்படி)

தாய்மொழிப் பற்றில்லை; இனப்பற்று மற்றூர்!
தம்மினத் தாரையே பகையெனச் செற்றூர்!
நாய்மொழி என்னினும் அவர்கற்க லுற்றூர்;
நாற்பது நூற்றூண்டாய் அடிமையிங் குற்றூர்!
(உருப்படி)

வெற்றுமை, வெள்ளைத்தாள், எழுத்துப்போ ராட்
டம்!
விறுகொள் என்றிடில் எடுப்பர் நல் ஓட்டம்! [டம்!
ஒற்றுமை என்பது தாளொட்டும் பசையே!
உயர்பாடல் என்பது கழுதைகத் திசையே!
(உருப்படி)

www.thamizham.net - Free E book No 7417

நமக்கு வந்த மடல்கள்

O தென்மொழிப் புத்தகங்கள் தொகுப்பாக வைக்க வேண்டிய பெட்டக நூல்கள். ஆதலின் இனிவரும் இதழ்களிலிருந்தாவது நல்ல தரமான தாள்களைக் கொண்டு அச்சிட வேண்டுகிறேன்.

— பொன்கோபால், பெரியகுளம், காஞ்சி.

O "தென்மொழி நலமில்லை; நீங்கள் நலமா?" – என்ற தலைப்பைக் கண்ணுற்றேன். புண்ணுற்றேன் உளம். கண்ணீர் மல்கினேன். அதில் தாங்கள் குமுறும் குமுறல்; வடிக்கும் குருதிக் கண்ணீர்; விடுக்கும் தமிழ் மூச்சு; ஏங்கும் தனித் தமிழுணர்வு-தெள்ளிதின் விளங்குகின்றன. எத்தனை இடர்ப்பாடுகள் வரினும் அத்தனை இடர்ப்பாடுகளையும் எடுத்து எறிய என் போன்ற இளைஞர் ஈடுபாட்டோடும் எடுப்போடும் எழுந்த வண்ணம் உள்ளனர். ஆதலினால் தாங்கள் கவலாது, கலங்காது, முயற்சி குன்றாது வினைப்பாடுகளில் நோக்காயிருந்து தென்மொழியை வெளியிட்டு வரவேண்டுகின்றேன். 'பழுப்புத்தாளாயினும் பழுதின்றித் தமிழினை எழுப்பும்வேளாண் தொழிலே மேல்" என எண்ணித் தமிழ்த் தொண்டு செய்யுங்கள்.

— திருவழகு, அன்னியூர்.

O சென்ற விதழைப் படித்து விட்டு மிகவும் மனம் துயரப்பட்டேன். தென்மொழி காலந்தாழ்த்து வருவதன் உண்மைக் காரணத்தைப் புரிந்து கொண்டேன். தாங்கள் ஏற்றுள்ள பணியில் எவ்வகையான இடையூறும், பொருளடைவு நெருக்கடியும் ஏற்படாவண்ணம் தங்களுக்குத் தமிழ்த்தாய் துணை நிற்க வேண்டுகின்றேன்.

எதன் பொருட்டும் தாங்கள் கவலுறாமல் இருக்கும்படி வேண்டிக் கொள்கிறேன். எண்ணற்ற இளைஞர்களின் துணை தங்களுக்கு என்றும் உண்டு. 'தென்மொழி'யைத் தொடர்ந்து வெளியிடுங்கள். என்னால் முடிந்த வரை இன்னும் உறுப்பினர்களைச் சேர்க்க முயற்சி செய்கின்றேன்.

— ப. தங்கவேலன், மைசூர்.

O இன்றைய அரசியலில் ஏதாவது ஒரு கட்சியைச் சார்ந்து, அதற்கு ஏற்றாற் போன்று சென்றால்தான் நன்கு வாழ முடியும் என்ற நிலைமை இருப்பதால் வினை, வினை என்ற ஒரே நோக்கில், உள்ளத்தை இழக்காது செல்கின்ற உங்களுக்கு இத்தனை இடர்ப்பாடுகள்; இவ்வளவு இன்னல்கள். இயல்பே!

— அருட்குவை, நெய்வேலி-3.

O தென்மொழியைக் கண்டேன். எனது நெஞ்சம் செந்நீர் உகுத்தது கண்களில் நீர் தேங்கிற்று. இனும் சின்னாட்களே இத்தொல்லைகள் எல்லாம். பிறகு பாருங்கள். ஏமாற்றமெனும் எரிமலை வெடிக்கத்தான் போகிறது. அதன் வயப்பட்ட அரசுகள் அழியத்தான் போகின்றன. தமிழர் தன்னாட்சி — தனியாட்சி – பெறத்தான் போகின்றனர். அப்போது தென்மொழியின் தொண்டினை மக்கள் உன்னத்தான் போகின்றனர். தமிழ் உய்யத்தான் போகின்றது.

— சி. அறிவுறுவோன், அம்மையகரம்.

(தொடர்ச்சி 3-ஆம் அட்டைப்பக்கம்)

www.thamizham.net - Free E book No 7417



தென்மொழி

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக் கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

சுவடி 7: ஓலை 5, 6

இரட்டை, கடகம் தி. பி. ௨000 (1969. சூன்-சூலை-ஆகச்டு)

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

தழைக தமிழ் மருத்துவம்!

தமிழ் மருத்துவம் என்பது குமரிக்கண்டத்து வாழ்ந்திருந்த தமிழ் மக்களுள் இயற்கையியலையும், உடலியலையும், உயிரியலையும் நன்கு தெரிந்து, தேர்ந்து, தெளிந்த நுண்ணறிவு வாய்ந்த சான்றோர்களால் கண்டறிந்து கடைப்பிடிக்கப் பெற்றுத் தொன்றுதொட்டு வழக்கியலில் இருந்துவரும் ஓர் அரிய கலையாகும். இவ் வொப்புயர்வற்ற மருத்துவக்கலை தலைக் கழகக் காலத்தே ஓங்கியிருந்து, கடைக் கழகக் காலத்தே அழியத் தலைப்படுமுன் சித்தர்கள் என்னும் தமிழ் முனிவர்களால் காத்துப் புரக்கப்பெற்று, ஓலைச்சுவடிகள் வாயிலாகவும், அரிய பல மரபுவழிச் செய்தியாகவும் பிற்காலத்துத் தமிழர்கள் கைகளில் வந்துற்றது. இடையிடையே இம் மருத்துவத்தில் பல பிறழ்ச்சிகளும், முறை மாற்றுகளும், பூசல்களும், அழிவுகளும் நேர்ந்து, இற்றை ஞான்று பற்பல நூல்களின் வடிவிலும், பரம்பரைக் குடும்பத் தொழில் வகையிலும் சித்த மருத்தும் என்னும் பெயரில் உயிர் பிழைத்து வருகின்றது. சித்தம், சித்தர் என்பன தூய தமிழ்ச் சொற்

களே. செத்தல் (கருதுதல்) என்னும் வினையடியாகப் பிறந்த சொல். செத்து-கருத்து; செத்து-சித்து-கருத்து, அறிவு, ஓதி (ஞானம்)-பாவாணரின் வடமொழி வரலாறு)

அறிவுப் புலனால் தெரிக்கப் பெற்ற மருத்துவமே சித்த மருத்துவம் என வழங்கும் தூய தமிழ் மருத்துவம். இக்காலத்து இந்திய மருத்துவம் என்ற தொகுபெயரின் கீழ்வரும் சித்த மருத்துவமும், ஆயுர்வேதம் என்னும் ஆரியமுறை மருத்துவமும், யூனானி மருத்துவம் என்னும் மேலையர் முறையொடு திரிந்த கலவை மருத்துவமும் ஒன்றாகவே வைத்தெண்ணப்பட்டு வருவதோடு, பெரும்பாலான முத்துறை மருத்துவர்களால், தமிழும், வடமொழியும், ஆங்கிலமும் கலந்து பேசப்பெறும் இக்காலத் தமிழ்போலவே, மும் மருத்துவமும் ஏறத்தாழக் கலப்புற்றதொரு புது முறைப் பண்டுவம் செய்யப்பெற்று வருவதால், தூய தமிழ் மருத்துவமான நம் சித்த மருத்துவத்தின் பெருமை, கலப்புத் தமிழுட்பட்ட தனித் தமிழின் பெருமை போலவே விளக்கி அறியப் பெறாத தொன்றாய்க் கிடக்கின்றது. பிறமொழிக் கலப்பினின்று மீட்கப்பெறும் தமிழ்போல், பிற மருத்துவமுறைக் கலப்பினின்றும் நம் பண்டைத் தமிழ் மருத்துவம் மீட்கப்பெற்றுத் தனிநடை பயிலுமாயின், இவ்வுலகத்து வேறெங்கணும் காணவியலாததோர் அரிய மருத்துவக் களஞ்சியமாம் சித்த மருத்துவத்தின் உண்மை ஒளியினை யாவரும் காணலாம்.

உலகப் பழமையும் தாய்மையும் வாய்ந்த நம் தமிழ்மொழியே காலத்தானும், மக்களானும், இடத்தானும் வேறுபட்டுக் கொடுந் தமிழாகவும், பின் திசைமொழிகளாகவும், நடுத்திரவிட மொழிகளாகவும், வட திரவிடமொழிகளாகவும், ஆரியமாகவும், பின் மேலை ஆரியமொழிகளாகவும் பின் நூற்றுக்கணக்கான வேற்று மொழிகளாகவுந் திரிந்தது போலவே, காலத்தானும் கருத்தானும் உலக முதல் மருத்துவமாகிய நம் பண்டைத்தமிழ் மருத்துவமே வடக்கே ஆயுர்வேதமாகவும், பின்னை, சீனை, செருமானிய, கிரேக்க நாடுகளிற் பரவி மீட்டுந் திசை திரும்பி யூனானி மருத்துவமாகவும், திசைதிரும்பா ஆங்கில மருத்துவமாகவும் பயிலப்பெற்று வருவதைத்தமிழ் மருத்துவ வரலாறும், ஆயுர்வேத, ஆங்கில மருத்துவ வரலாறும், உலகியன் மாந்த, மொழி, நிலநூல் வரலாறும் நடுநிலையாகக் கற்றுணர்ந்த அறிஞர் பலரும் உறுதிப்படுத்துவர்.

நம் பண்டைத் தமிழ்மொழியின் அளப்பரும் தன்மைபோலவே நம் பண்டைத்தமிழ் தமிழ் மருத்துவத்தின் அருமை பெருமையும் அளக்கலாகாத் தன்மை வாய்ந்தது. நம் நாட்டுச் சிற்றூர்ப்புறங்களில் இன்றும் பல குடும்பங்களின் வழிவழித் தொழிலாய் அமைந்து, தீர்க்கலாகாவென்று பெரும்பெரும் ஆங்கில மருத்துவர்களாலும் அறுவை அறிஞராலும் கைவிடப்பெற்ற புதுமையும் கடுமையும் கொடுமையும் வாய்ந்த பற்பல நோய்களையும்கூட, எளிதிற் கிடைக்கும் இலை தழை வேர்கள் கொண்டும் அல்லதவற்றைக்கொண்டு செய்யப்பற்ற சாறு, வடிநீர், சுருக்கிவடித்த குழம்பு (கஷாயம்), நெய் அல்லது எண்ணெய் (கிருதம்). களிம்பு, மெழுகு (இலேகியம்), குளிகை, நீறு (பஸ்பம்) முதலிய வேதியல் மாற்றப் பொருள்களைக் கொண்டும் குணப்படுத்தி வருவதைக் கண்டும், கேட்டும், தாமே பட்டறிந்தும் வருகின்றமையை உணர்ந்தால்

www.thamizham.net - Free E book No 7417

தமிழ் மருத்துவத்தின் பெருமை ஒருவாறு தேரப்பெறும். நாட்டுப்புறங் களில் மட்டுமே இம் மருத்துவம் இன்னும் தங்கி வாழ்வதாலும், நம் நாட்டுக்கே யுரிய முறையாதலாலும் இது நாட்டு மருத்துவம் என்றும் வழங்கப்பெற்று வருகின்றது.

முதுமை முற்றும் மறைந்து இளமை கொப்பளித்த முனிவர் ஒருவரைப்பற்றியும் அவர் கண்ட ஓர் அரிய வேரைப் பற்றியும், பின் அதை இழக்க நேர்ந்து வருந்தியதைப் பற்றியும் உரைக்கும் ஓர் அரிய செய்தி கொங்குமண்டலச் சதகச் செய்யுளொன்றினுல் அறியப்பெறுகின்றது. தேரையர் என்னும் மருத்துவச் சித்தர் ஒருவர் ஓர் அரசன் மண்டையோட்டில் தங்கிய தேரையொன்றினை, அம்மண்டையோட்டைத் திறந்து வெளிப்படுத்தியதும் பின் அதன் காரணியமாக அவர் அப் பெயர் பெற்றதும் வழிவழியாய்க் கேட்கும் மெய்ச் செய்தியே! தேரையரின் மாணவரும் 'வைத்திய சிந்தாமணி'போன்ற பல மருத்துவ நூல்களின் ஆசிரியருமான யூகிமுனிவர் வீரசுண்ணம் என்பதோர் அரிய மருந்தினை உண்பித்துக் கருங்காக்கை யொன்றின் நிறத்தை முற்றும் வெள்ளிய நிறமாக மாற்றினுர் என்ற செய்தி மருத்துவநூலுள் கூறப் பெறுகின்றது. இவைபோலும் பண்டைச் செவிவழிச் செய்திகளேயன்றி, இன்றும் நேரில் கண்டுணர்ந்த அரிய செய்திகளும் ஆயிரக் கணக்கில் ஆங்காங்கே சொல்லப்பெற்று வருகின்றன. இன்னும், ஆங்கில மருத்துவரால் கைவிடப்பெற்ற பல கொடுநோய்களைக் குணம் படுத்திவரும் சிறந்த சித்த மருத்துவர் சிலரும், அவர்களை யறிந்த பலரும், அம்மருத்துவத்தால் குணம்பெற்ற நோயாளிகள் மிகப் பலரும் இருந்துதாம் வருகின்றனர். இவர்கள் அத்தனையர் தம் மருத்துவ அறிவு பற்றியும் அவர்தம் அரும்பெரும் செயல்கள் பற்றியும் இங்கெழுதப் புகுந்தால் இக்கட்டுரை மிகவும் நீண்டதொரு நூலாகவே விரியும்.

இன்னும்,

> 'நெடுவசி பரந்த வடுவாழ் மார்பின்
> அம்புபோல் உடம்பினர்'—

எனவரும்பதிற்றுப்பத்தின் (42: 4-5) பாட்டடி, பண்டைத் தமிழ் மருத்துவர்கள் அறுவை மருத்துவத்திலும் திறம் பெற்றிருந்ததை உணர்த்தும்.

இனி, தமிழ்ச் சித்த மருத்துவத்தின் அடியொற்றியதும் ஆயுர் வேதம் என்று கூறப்பெறுவதுமான ஆரிய மருத்துவத்தில், அம் மருத்துவத்தின் முதல்தோற்ற நூலாகியதும் ஐத்ரேயர் என்னும் வடமுனிவரால் ஆக்கப் பெற்றதுமான 'ஐத்ரேய சம்ஹிதை' என்னும் நூலுள் தமிழ் மருத்துவத்தில் கொள்ளப்பெறும் உப்பு, களியம் (உலோகம்) சாரம் (ரசம்), நச்சம் (பாஷாணம்) இவற்றைப் பற்றி, ஒன்றும் கூறப் பெருததே, ஆரிய மருத்துவத்தின் பின்மையையும், தமிழ் மருத்துவத்தின் முன்மையையும் தனிச்சிறப்பினையும் உணர்த்தும். மேலும் ஆங்கில மருத்துவம் உட்பட உலக மருத்துவ முறைகள் யாவும் தமிழ் மருத்துவத்தின் அடியொற்றியவையே!

தமிழ் மருத்துவ நூல்களுள் மருந்து என்ற ஒரு தனிப்பொருள் எங்குமே குறிக்கப் பெறவில்லை. உணவே மருந்தாகவும், மருந்தே உண

www.thamizham.net - Free E book No 7417

வாகவுமே குறிக்கப்பெற்றுள்ளன. தமிழர்தம் வழிவழி முறையாக கொள்ளப்பெறும் உணவுப் பொருள்கள் சான்றோர்களால் தெரிந் தெடுக்கப்பெற்ற மருந்துகளே. அன்றாட உணவுக்காக நாம் பயன்படுத் தும் அரிசி, கம்பு, கேழ்வரகு, சாமை, தினை முதலிய கூல வகைகளும் உப்பு, கொத்துமல்லி, மிளகாய், இஞ்சி, சுக்கு, மிளகு, கடுகு, சீரகம் முதலிய மசாலைப் பொருள்களும், கொத்துமல்லிக் கீரை, கறிவேப்பிலை, புதினா முதலிய மணப்பொருள்களும் மருத்துப் பொருள்களே. பிற நாட்டு மருத்துவ முறைகளிலும் இவ்அடிப்படைப் பொருள்களே பல வகையான வேதியல், விலங்கியல் மாற்றமெய்தி மருந்துகள் என்னும் பெயரில் பலபடக் கையாளப் பெறுகின்றன. தமிழ் மருத்துவ முறை யிலோ இவை மூலமாகவும், புதியனவாகவும், நேரிடையாகவும், ஒரு சில மாறுதலுடனும், சிற்சில சிதைவோடும் ஆளப்பெறுகின்றன- மொத் தத்தில் பெயரும் முறையும் மாற்றமேயன்றி பொருள் ஒன்றுதான். மருத்துவத்திலேயே சிறப்புடையது மருந்தன்று; மருந்துதரும்முறையே!

'நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்'

—என்னும் குறளுள் மருத்துவன் மருந்து எனும் ஒரு பொருளைக் கையாளவேண்டும் என்பதாகக் குறிப்பேயில்லை. வாய் என்பது மருந் தையே குறிப்பதாகாது; மருந்தையும் குறித்ததாகவே கொள்ளுதல் வேண்டும்.

தமிழ் மருத்துவம் எளிதே எங்கும் கிடைக்கும் இயற்கைப் பொருள் களிலும், அவற்றைக் கொள்ளும் முறைகளிலுமே பெரும்பாலும் அடங்கியுள்ளது. சில பொருள்களே கிடைப்பதற் கருமையான பொருள் களாம். நோயின் கடுமை நோக்கின் அவையும் எளிய பொருள்களே. பொன், வெள்ளி, தாமிரம், துத்தநாகம், இரும்பு முதலிய கனியப் பொருள்களும், மாணிக்கம், வயிரம், பவழம், முத்து முதலிய மணிப் பொருள்களும், பால், கத்தூரி, புனுகு, கோரோசனை, கொம்பு, குளம்பு, மலக்கழிவு, நீர்க்கழிவு, இறைச்சி, ஓடு முதலிய உயிரிப் பொருள்களும், தமிழ் மருத்துவத்தில் அரிதாகக் கையாளப்பெறும் மருத்துப் பொருள் களே! இவையன்றிக் கண்கூடானவையும் கிடைக்கற்கெளிதானவையு மான,

இலுப்பை, எட்டி, கருங்காலி, கருவேலன், வெள்வேலன், வில்வம் வெண்காலி, சண்பகம், மருதோன்றி, புன்கம், பாதிரி, நெல்லி முதலிய மரங்கள்; குவட்டி, களா, செந்தொட்டி, சித்தாமுட்டி, பேராமுட்டி முத லிய செடிகள்; முசுமுசுக்கை, காக்கட்டான், காஞ்சொறி, பேய்ச்சுரை, குறிஞ்சா, அறுகு, மல்லிகை, பச்சைத்திப்பிலி முதலிய கொடிகள் இவற் றின் வேர் வகைளும்,

இஞ்சி, மஞ்சள், கருணை, முள்ளங்கி, சருக்கரை, நிலச்சருக்கரை, அமுக்கிராம், சேம்பு, சீந்தில், கோவை, கூகை, புளிநரளை, தாமரை, நெய்தல், கொட்டி, நிலப்பூசனி, வள்ளி முதலிய செடிகள், அறுகு, கோரை, மருளை, கிட்டி. வெங்காயம் முதலிய புற்கள் ஆகியவற்றின் கிழங்கு வகைகளும்,

www.thamizham.net - Free E book No 7417

கருவேலன், நொச்சி, புளியன், சருங்காலி, அத்தி, கோங்கு, கொஞ்சி, நாவல், முருங்கை, அக்காரம் முதலிய மரங்களினின்று கிடைக்கும் பட்டை வகைகளும்,

முருங்கை, மா, மலைவேம்பு, கருவேலன், வாகை, இலவம், விளா, அடப்பம் முதலியவற்றின் பிசின் வகைகளும்,

மரு, வேலன், வேம்பு முதலியவற்றின் கொழுந்து வகைகளும்,

வேம்பு, அகத்தி, ஈந்து, மூங்கில், முருங்கை, புளியன் முதலிய மரங்கள்; குப்பைமேனி, எருக்கு, தக்காளி, தும்பை, தூதுளை, சுரை, புகையிலை, ஆடாதோடை, ஆமணக்கு, செம்பை, நொச்சி, கின்னி, விராலி, பாலை, உத்தாமணி, கழற்சி, குமட்டி, முசுமுசுக்கை முதலிய செடி கொடிகள் ஆகியவற்றின் இலை வகைகளும்,

தாமரை, அல்லி, முல்லை, மல்லிகை, நெய்தல், கழுநீர், வெட்சி முதலிய கொடிகள்; அலரி, நந்தியாவட்டை, களா, செம்பருத்தி, ஆவாரை, செம்பை, செவந்தி, தும்பை முதலிய செடிகள்; வாழை, முருங்கை, மாதுளை, தாழை, கொன்றை, சண்பகம், பாதிரி, குங்குமம் முதலிய மரங்கள் ஆகியவற்றின் பூ வகைகளும்,

வாழை, பலா, மாதுளை, மா, முருங்கை, நரந்தை, கத்தரி, அவரை முதலியவற்றின் பிஞ்சு வகைகளும்,

அத்தி, இத்தி, நெல்லி, முருங்கை, பலா, வாழை, புளி, கடுக்காய், எலுமிச்சை, நாரத்தை, பனை முதலிய மரங்கள்; ஊமத்தை, வெண்டை, சுண்டை, களா, தக்காளி, கத்தரி முதலிய செடிகள்; வெள்ளரி, சுரை, பறங்கி, பூசுணை, புடலை, அவரை, பீர்க்கு, பாகல், வழுதுணை, குமட்டி முதலிய கொடிகளாகியவற்றின் காய் வகைகளும்,

வாழை, மா, பலா, நாவல், கொய்யா, எலுமிச்சை, நரந்தம், பேரீச்சம், தாழம், களா, காரை, கொடிமுந்திரி, தூதுளை முதலியவற்றின் கனி வகைகளும்,

மா, பலா, புளி, எட்டி, புன்கன், கடப்பன், ஆளி, உத்திராக்கம், நெருஞ்சில், தேற்றான், குன்றி, சாமை, தினை, திப்பிலி, கேழ்வரகு, கம்பு, பயறுவகைகள் முதலியவற்றின் விதை வகைகளும்,

முந்திரி, வாதுமை, சாரா, மிசிரி, துத்தி, தகரை, ஊமத்தை முதலியவற்றின் பருப்பு வகைகளும்; இவற்றின் கலவைகளும், பிழிவுகளும், சாந்துகளும், தூள்களுமே சித்த மருத்துவப் பொருள்கள். இவற்றுள் பெரும்பாலானவை உணவுப் பொருள்களே என்பதையும் இவை எத்துணை வெளிப்படையான மருத்துவப் பொருள்கள் என்பதையும் அறிந்துகொள்க.

இனி, இன்றுள்ள எத்துறையிலும் தூய தமிழ்ச் சொற்கள் கையாளப் பெறுதது போலவே, சித்த மருத்துவத்திலும் வடமொழிச் சொற்களே மிகுதியும் கையாளப் பெறுகின்றன. கருக்குக் குழம்பை 'கஷாயம்' என்றும் மெழுகை 'லேகியம்' என்றும், நீற்றைப் 'பஸ்பம்'

www.thamizham.net - Free E book No 7417

என்றும், கனியத்தை 'உலோகம்' என்றும், செந்தூரத்தை 'ஸிந்தூர' மென்றும், குளிகையைக் 'குளிகா' என்றுமே இற்றைத் தமிழ் மருத்துவர்கள் கூறி வருகின்றனர். எனவே தான் தமிழ் மருத்துவம் ஆரிய (ஆயுர்வேத) மருத்துவத்தினின்று கிளைத்ததுபோல் அறிவாராய்ச்சியற்ற ஆரிய அடிமைகளும் ஆரியப் பார்ப்பனர்களும் இட்டுக் கட்டிப் பேசி, அச்சொற்களையும் எடுத்துக் காட்டிக் கதை பரப்புகின்றனர். ஆரியப் பார்ப்பனர் செய்த அளவற்ற கேடுகளில் இம்மருத்துவத் துறைக் கேடும் ஒன்று. எண்ணற்ற தூய தமிழ் மருத்துவ நூல்களை ஆரியத்தில் பெயர்த்தெழுதிக் கொண்டது மன்றி, அவற்றினின்று தான் தமிழ் மருத்துவமே கிளைத்தது என்று பொய்யுரைகளையும், போலிக் கதைகளையும் வீணே பரப்பி விட்டனர். பதினெண் சித்தர் எழுதியனவாகக் கிடைக்கும் பாடல் நூல்களிலும் மருத்துவ நூல்களிலும் வரை துறையின்றி வட சொற்கள் மலகி வருவதாலேயே அச் சித்தர்கள் எங்ஙன் ஆரியராகாரோ, அவ்வாறே அவர் நூல்களும் ஆரியக் கருத்துகள் தாங்கிய நூல்களாகிவிட முடியாது. எல்லாத் துறைகளையும் தம் கரவாலும், வஞ்சத்தாலும் வீழ்த்தியது போலவே மருத்துவத் துறையும் ஆரியப் பார்ப்பனரால் அன்றே வீழ்த்தப் பெற்றது. இன்றும் தமிழ் மருத்துவம் பயிலும் சித்த மருத்துவர் பலரும் ஆரிய அடிமைகளாகவே வாழ்க்கை நடத்தி வருவதைப்பார்க்க, தமிழன் இத்துறையிலும் - எத்துணையளவு போராட்டம் நடத்தியாக வேண்டியிருக்கின்றது என்பதை உண்மைத் தமிழன்பர்கள் கருத்தில் வைப்பார்களாக.

இனி, இத்தகைய சிறப்புப் பொருந்திய தமிழ் மருததுவம் இன்று எந்த நிலையில் உள்ளது என்று அறிந்துகொள்ள வேண்டியதும் அதனை மேலும் மேலும் ஓங்கச் செய்து உலகெலாம் புகழ் மணக்கும்படி செய்வதும் தமிழன் ஒவ்வொருவனுடைய கடமையாகும். நடுவணரசைப் பொறுத்தவரை, சித்த மருத்துவத்திற்கென்று எந்தத் தனிச் சிறப்போ சலுகையோ கிடையாது. ஆயுர்வேதம், சித்தம், யூனானி ஆகிய மூன்றையும் இந்நாட்டின் பழமை பொருந்திய (Inidigenous) மருத்துவங்களாகவே மதிக்கின்றனர். பெரும்பாலும் இம்மூன்று மருத்துவ முறைகளும் தமிழகத்தில்தான் மதிக்கப் பெறுகின்றன. சிறப்பு வாய்ந்த சித்த மருந்துவமோ இம்மூன்றிலொன்றாகவே, கருதப் பெறுகின்றது. சித்த மருத்துவத்திற்கென்றே பல தனிக் கல்லூரிகள் தோன்ற வேண்டிய இன்றியாமையிருக்க, இம்மூன்றையும் கலந்த கலவை மருத்துவம் போன்றதொரு மருத்துவ முறையைக் கற்பிக்கும் கல்லூரியே உள்ளது. அதுவும் ஒன்று. அஃது இருப்பதும் தமிழகத்தின் தெற்கே நெல்லை மாவட்டத்தில் — பாளையங்கோட்டையில், 1964 முதற்கொண்டே இக்கல்லூரி செயல்பட்டு வருகின்றது என்பதை எண்ணுகையிலும், இந்தியாவுக்கே இக்கல்லூரி ஒன்றுதான் என்று எண்ணுகையிலும் இக்கல்லூரியிலும் ஏராளமான மாணவர்கள் படிக்க முன்வந்தும்ஒவ்வோராண்டிற்கும் 30 மாணவர்களே சேர்த்துக் கொள்ளப் பெறுகின்றனர் என்று அறிகையிலும் தமிழ்க் கலைகள் எவ்வளவு தொலைவு புறக்கணிக்கப்பட்டு வருகின்றன என்பதை அறியலாம்.

www.thamizham.net - Free E book No 7417

மேலும் ஆங்கில நாகரிகத்தின் போலிப் புனைவுகளாலும் ஆரவார விளம்பரங்களாலும் கவரப்பெற்ற இக்காலத்தில், ஆங்கில மருத்துவத்திற்கென்று தமிழகத்தில் ஒன்பது கல்லூரிகள் இருக்கின்றன. (சென்னை-3; செங்கற்பட்டு-1, தஞ்சை-1, மதுரை-1, கோவை-1, நெல்லை-1; வேலூர் (தனியார் கல்லூரி)-1.

ஆங்கில மருத்துவம் கருவிகளாலும் விளம்பரங்களாலும், நாகரிகப் போலிப் பெருமையாலும் உயர்ந்ததுபோல் தோற்றங் காட்டுகின்றதேயனறி, அது தமிழ் (சித்த) மருத்துவத்தைவிட எள்ளின் மூக்கத்துணையும் மேம்பட்டதன்று; மாறாக மிகவும் கீழ்ப்பட்டதே என்பதை ஆங்கில மருத்துவக் கோட்பாடுகளையும் அதன் கொள்பயன்களையும், தமிழ் மருத்துவக் கோட்பாடுகளையும் அதன் கொள்பயன்களையும் ஒன்றாக உணர்ந்து தெளிந்த அறிஞர் பலரும் உணர்வர். ஆங்கில மருத்துவத்திற் கையாளப்பெறும் கருவிகளும் பெரும்பாலும் நோயை அறியத்தாம் பயன்படுகின்றனவேயன்றி நோயைத்தீர்க்க ஒரு சிறு அளவிலேயே பயன்படுகின்றன—என்பதை அவ்வாங்கில மருத்துவர்களே மறுக்க முடியாது. கொடிய நோய்களான புற்று நோய், தொழுநோய், மாரடைப்பு, மூலம், பைத்தியம், கக்கற்கழிச்சல் (காலரா) பெரியம்மை, யானைக்கால் முதலிய நோய்களுக்கு ஆங்கில மருத்துவம் இன்னும் தீர்வான ஒரு மருந்தையும் கண்டு பிடிக்கவில்லை. தமிழ் மருத்துவத்தால் தீர்க்கப்பெறாத நோயே இல்லையென்று நம் மருத்துவ நூல்கள் அறுதியிட்டுரைக்கின்றன. இந்தியாவின் பொருளியல் சிக்கலுக்குக் காரணியமான மக்கட்பெருக்கைத் தமிழ் மருத்துவத் தடைகொண்டு தடுத்து நிறுத்த முடியும். ஆனால் தேவையற்ற வகையில் ஏராளமான பொருள் இவ்வழி சேதப்படுத்தப்படுகிறது. மேற்கண்ட நோய்களை முற்றும் குணப்படுத்தும் சிறந்த மருத்துவர்கள் இன்றும் தமிழகத்தில் உள்ளனர். போதிய வாய்ப்பின்மையால் அவர்கள் எங்கேனும் ஒரு சிற்றூரில் அமர்ந்தபடி வறுமையுளகப்பட்டுத் தம்மையும் தாம் கற்ற அரிய மருத்துவத்தையும் அழித்துக் கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், பாளையங்கோட்டையில் உள்ள இந்திய மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கும் போதிய ஏந்து (வசதி)கள் செய்து தரப் பெறவில்லை என்பதை யறிந்து மிகவும் வருந்துகின்றோம். அங்குள்ள ஆங்கில மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கும் இந்திய மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு மிடையில் பூசல்களும் போட்டிகளும் போராட்டங்களும் நடைபெற்று வருவது மேலும் துயரத்தை விளைவிக்கின்றது. அண்மையில் நடைபெற்ற போராட்டத்தில் தமிழ் மருத்துவத்தைப் பகடி செய்யும் சுவரொட்டிகள் பலவற்றை அங்கு

www.thamizham.net - Free E book No 7417

போயிருந்த பொழுது கண்ணுற நேர்ந்தது. திருவள்ளுவர் கழுத்தில் துடிப்பறிமானி (Stethoscope) யைத் தொங்கவிட்டவாறு ஒரு படச் சுவரொட்டியுடன், நாடி பார்ப்பவர்களுக்கு இக்கருவி எதற்கென்று ஒரு கேள்வியும் இன்னும்பல போராட்டச் சொலவங்களும் (Slogans) எழுதப்பெற்றிருந்தன. இன்னொன்றில் கல்வம் ஒன்று வரையப்பெற்றுத் தமிழ் மருத்துவத்தைத் தாழ்த்தி யெழுதிய உரைகளும் காணப் பெற்றன.

ஆங்கில மருத்துவ மாணவத் தமிழர்கள் ஒன்றை உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். திருவள்ளுவர் தமிழ் மருத்துவம் பயிலும் மாணவர்களுக்கு மட்டுமே உரியவரல்லர். ஆங்கில மருத்துவ மாணவ அன்பர்களுக்கும் வேண்டியவரே. அவர் எப்படி எல்லார்க்கும் பொதுவானவரோ அப்படியே அவர் கழுத்திலுள்ள துடிப்பறிமானியும் எல்லார்க்கும் பொதுவே. மருத்துவம் பயிலாத ஒரு தனிப்பட்ட மாந்தனும் கூட அதனை வைத்திருக்கத் தடையில்லை. மருத்துவர்களுக்கே தேவையான வெப்பமானி (Thermameter) யைப் பெரும்பாலார் தம் வீடுகளில் வாங்கி வைத்திருக்க வில்லையா? இவையெல்லாம் ஒரு கலைக்கான கருவிகளே. அன்று தமிழன் பனையோலைகளில் எழுதிவந்தான் என்பதற்காகத் தமிழனுக்காகப் பரிந்துபேசும் பேச்சுக்களெல்லாம் பனையோலைகளில்தாம் எழுதப்பட வேண்டுமா? அன்று தமிழன் நடந்தோ மாட்டுவண்டியிலோ போனான் என்பதற்காக இன்று மேனாட்டாரின் ஒவ்வாப் பண்பாடு வேண்டா என்போன் உந்துவண்டியில் ஏறக் கூடாதா? அவ்வாறானால் ஆங்கில மருத்துவம் பயில்வோர் தமிழ் நிலத்தில் நடப்பதுமட்டும் எப்படிச் சரியாகும்? தமிழ்நாட்டின் இட்டளி, தோசை, ஆப்பம், இடியாப்பம், வடை இவற்றை உண்ணுவதுமட்டும் எப்படிச் சரியாகும்? கருவியில்லாத காலங்களில் கலை பல முறைகளில் இயங்க வேண்டுவதாயிற்று. கருவியே கலையாகாது. பழங்கால ஓவியங்கள் திரைச்சீலைகளிலும் தோல்களிலும் பலவாறான சாயப்பொருள்களைக்கொண்டு குழைத்த வண்ணங்களால் வரையப்பட்டன என்பதால் ஓவியம் எல்லாம் அப்படித்தான் வரையப்பட வேண்டும் என்று கூறுதல் கூடாது. புதிய கருவிகளைக்கொண்டு பழைய கலைகளைப் பயில்வதால் கலை சிறப்படையுமே தவிர கருவி இழிவடையாது. திருக்குறள் இக்கால அச்சுப் பொறிகளில் அச்சாவதால் திருக்குறள் பெருமையுறுவதுடன் நன்கு பரவ முடிகின்றதில்லையா? இந்த எளிய விளக்கத்தைப் புரிந்துகொண்டிருந்தால் ஆங்கில மருத்துவம் பயிலும் மாணவர்கள் தமிழ் மருத்துவம் பயிலும் மாணவர்களை அவர்கள் துடிப்பறிமானியைக்கையாள்வதற்கும்குருதியோட்டமானியைப்பயன்படுத்துவதற்கும், சுரமானியைப் பயன்படுத்துவதற்கும் யாதொரு மறுப்பும் கூறியிருக்க மாட்டார்கள்; பூசலும் விளைந்திராது.

[தொடர்ச்சி 32-ஆம் பக்கம் பார்க்க]

www.thamizham.net - Free E book No 7417

‘கல்கி’யும் ‘நடை’யும்

தனித்தமிழ்க் காவல!

சென்ற (ஜூலைத்)திங்கள் வெளிவந்த ‘கல்கி’ இதழில், ‘பர்க்லி’ பரிசுத் திட்டத்தில் வரலாற்றுப் பிரிவுப்போட்டியில் கீழ்வருமாறு விளக்கப்பட்டுள்ளதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தேன். சிலப்பதிகாரத்தில் வரும் இளங்கோவடிகள் மாதவியைக் காதலிக்க, மாதவி அவரைப் புறக்கணித்துவிட, மாதவியைக் குறைபட விளக்கவே இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் எழுதினார் என்று கூறுகிறாராம். இதையெழுதியவர் ஐக்கன் என்றும், இதற்குத்தக்க அடிப்படைகள் அவரிடம் இருப்பதாகவும் அவர் கூறுகிறாராம். இதைக்கண்டு வருந்திய நான் இதைத் தங்களின் பார்வைக்கு கொணர்கிறேன்.

மேலும் ‘நடை; என்ற இலக்கிய முத்திங்கள் ஏடு ஒன்று கிருட்டிணசாமி என்னும் ஒருவரால் நடத்தப்பட்டு வருகிறது. இலக்கணத்தளையிலிருந்து இருபதாம் நூற்றாண்டை விடுவித்து, ஒரு “நவீன கவிதை” உலகை உருவாக்கப் போகிறார்களாம். உரைநடையே செய்யுள் என்று அதில் காட்டப்படுகிறது. ‘செல்லப்பா’ பாடல்களைப் போன்றுள்ளன அவர்களின் பாடல்கள். அவர்கள் கீழ்வருமாறும் மொழிக் கொலை செய்கின்றனர்.

கீழ்வரும் பாடல் ஒரு பாடலின் கடைசி ஐந்து வரிகள்மட்டும்.

பண்டிதன் கணக்குப்படி, ஆ
க மொத்தம்
தமிழ ருக்குத் தெரிய வில்லை
தமிழ் எ ழு
த.

எவ்வாறு தமிழைப் பிய்த்துப் போடுகிறார்கள் பாருங்கள். இதைக் கண்டித்து யானும் ஒரு மடலை அவர்கட்கு எழுதியுள்ளேன்.

இர. பொன்வேலன், அரசினர் கலைக்கல்லூரி, திருமுதுகுன்றம்,

www.thamizham.net - Free E book No 7417

காந்தியும் தமிழனும்

காந்திக்கு நூற்றுண்டு விழாக் கொண்டாடி வருகின்ற இந்த நேரத்தில் காந்தியின் கருத்துகள் எவ்வாறு இப்பொழுதுள்ள மொழிச்சிக்கலுக்கும், குமுகாய ஏற்றத் தாழ்வுகளுக்கும் அடிப்படையானவை என்பதைத் தமிழர்களாகிய நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்வது மிகத் தேவையான ஒன்ருகும். மொழித் துறையில் காந்தியால் நமக்கு விளைந்த விளைவுகளைச் சற்றுக் காண்போம். பெங்களூரில் நடந்த கருநாடக இந்தியப் பட்டமளிப்பு விழாவிலே பேசிய காந்தி பின்வருமாறு கூறியிருக்கிறர் :

"வடக்கே திருநகரிலிருந்து (சிரீநகர்) தெற்கே கன்னியாகுமரி வரையிலும் மேற்கே கராச்சியிலிருந்து கிழக்கே திப்ருகாரு வரையிலும் பரந்துள்ள இந்தியாவை ஒருசேரச் சிறிது நேரம் மனத்தால் எண்ணிப் பாருங்கள். இந்தியர் என்ற முறையில் இவ்வாறு எண்ணுவது தேவையன்றே? அப்படி எண்ணும்போது இந்திமொழி எவ்வளவு தேவையென்பதை உணர்ந்து கொள்வீர்கள். இவ்வாறு சேர்த்து எண்ணுவதற்கு இந்தி மொழி ஒன்றே துணை செய்யு மென்பதையும் அதைக் கற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்பதையும் கண்டு கொள்வீர்கள்."

மேற்கண்ட காந்தியின் உரைகளைப் படிக்கும் நமக்கு இன்றைய மொழிச் சிக்கலின் வேர் காந்திதான் என்பது தெற்றென விளங்கும். மேலும் அவர் இந்திமொழி ஒன்றே "இந்தியாவின் பொதுமொழியாய் இருத்தற்குத் தகுதியுடையதாகும் இந்தியாவிலுள்ள அனைத்து மொழிகளும் இந்தியோடு நெருக்கமான தொடர்பு உடையவை. இந்தி மொழியிலுள்ள சொற்களில் ஏராளமானவை தமிழ் உட்பட மற்ற மொழிகளிலும் காணப்படுகின்றன. ஆங்கிலத்தைக் கற்கும் காலத்தைக் காட்டிலும் இந்தியைக் கற்றுக்கொள்ள எடுத்துக் கொள்ளும் காலம் குறைவு."—என்றும் கூறியிருக்கின்றர். இன்று தமிழனுக்கு எதிராகச் செயல்பட்டு வரும் தென்னிந்திய இந்திப் பரப்புக் கழகத்தைத் தோற்றுவித்தவரும் இவரே ஆவார்.

மொழித்துறையில் மட்டும்தான் நமக்கு அவர் கேடு விளைத்தார் என்று எண்ணல் வேண்டா. இன்றைய குமுகாயத் துறையின் ஏற்றத் தாழ்வை அவர் பெரிதும் விரும்பினர். இவர் "வருணச்சிரம'.த்தைக் கட்டிக் காப்பது தான் விடுதலை கேட்பதன் நோக்கம்" என

www.thamizham.net - Free E book No 7417

அடிக்கடி கூறி வந்துள்ளார். நம் திரு. வி. க. அவர்களின் தொண்டுள்ளமும், தூய்மையும், ஒழுக்கமும் இவரைவிட எள்ளளவும் குறைந்தவல்ல. ஆனால் நம்மவர்களை நாம் மதிக்கும் போக்கு நம்மிடையே குன்றிவிட்டதால் காந்தி போன்றோர்களுக்கு இன்று நந்தமிழ் நாட்டிலே மிக்க புகழ் இருக்கிறது. ஆனால் வடவர்களோ நம்முடைய திரு. வி. க. வையோ, வ. உ. சி. யையோ திருப்பூர்க் குமரனையோ, காந்தியை உருவாக்கிய தில்லையாடி வள்ளியம்மையையோ யாரெனஅறியார். அறிந்தாலும் தம்மவர்களுக்குத்தாம் முதலிடம் அளிப்பார்கள். இன்று காந்தி பெயரால் கணக்கற்ற இடங்களை இங்குக் காணலாம். ஆனால் வடநாட்டிலே பேராயத்திற்காக அன்று உழைத்தவர்களின் பெயரையோ, இன்று உழைத்துவருபவர்களின்பெயரையோ காணல் இயலாது.

—பு. அ. மன்னர்மன்னன்.

பார்ப்பனப் பகைமை!

அன்புள்ள ஐயா,

என் உள்ளங்கனிந்த பணிவான வணக்கம். நான் முதன் முதலில் உங்களுக்கு எழுதும் இம்மடல் கண்டனம் தெரிவிக்கும் மடலாக அமைவது குறித்து வருந்துகிறேன். ஏற்கெனவே நெய்வேலியில் வாரியார் அடிபட்டார் என்ற வருத்தம் என் நெஞ்சை நெக்குருகச் செய்து விட்டது. இப்போது தாங்கள் வாரியாரை மதப்பித்தர் என்றும் ஆரிய அடிவருடி என்றும் ஆரியர் கொடுக்கும் செல்வத்தால் தின்று கொழுத்துத் தெருதெருவாக நின்று கதைபாடி ஊரைக் குட்டிச்சுவராக்கி வருபவர் என்றெல்லாம் எழுதியவை என்போன்றோர்க்கு வெந்த புண்ணிலே வேலைச் செருகி விட்டதுபோல் ஆகிவிட்டது. ஆரியன், வடவன், பார்ப்பான் என்று வரிக்குவரி பகைமையைப் பாலாக ஊட்டி வளர்க்கிறீர்களே, ஆரியர்களை எந்த நாட்டிற்கு எந்தக் கப்பலில் ஏற்றி அனுப்பத் திட்டம் வைத்துள்ளீர்கள்? பன்மையில் ஒருமை காண்பது எங்ஙனம்? கடவுளை ஒழிக்க முற்பட்ட கட்சியின்—வாரியாரை அடித்த கட்சியின் நிலை வெள்ளிடைமலை. கடவுளை ஒழிப்பதில் அண்ணா தோற்றுவிட்டார். ஏன் பெரியாரும் தோற்றுவிட்டார். சென்னையில் பத்து வருடங்களுக்கு முன் தெருத் தெருவாக பிள்ளையார் படிமங்கள் உடைக்கப்பட்டன. இப்போது தெருவுக்குத் தெரு பிள்ளையார் படிமங்கள் கோயிலாக முடிந்த அளவு மின்சார விளக்குடன் மிக அழகாகக் காட்சியளிப்பது கண்டு வியக்கின்றேன்.

www.thamizham.net - Free E book No 7417

யாருக்கும் சாதி வேண்டாம், முடிந்த அளவு மதமும் வேண்டா. சம நிலை வேண்டும்.

பொதுவாக வடலூர் ஐயா கொள்கைகள் வளரவேண்டும். வளரும். ஒவ்வோர் இதழ் தவறாமல் உங்கள் உள்ளத்தை உலுக்கிக் கொண்டிருப்பது, பார்ப்பான், ஆரியன், வடவன் என்ற சொற்கள். முன்னோர் செய்த தவற்றிற்கு இக்கால் இளம் பிஞ்சுகளும் இலக்கா? இறைவா–இறைவா! இது என்னே அறியாமை! உங்கள் கருத்து தமிழகத்தில் பகைமையை வளர்த்துவரும் என்பதில் சிறிதேனும் ஐயம் இல்லை. உறுதி! உறுதி. ஆனால் தமிழ் உயர்ந்தோங்கிவருகிறது. –உணரப்படுகிறது–உண்மை–உண்மை! தமிழகத்தில் ஒருபக்கத்தில் பகைமை வித்து ஊன்றிக்கொண்டு விடுதலை கேட்டு முழக்கமிடுவது எங்ஙனம்?

–சி. ஆறுமுகம், நெய்வேலி–3.

வண்ணனை மொழிநூலின் வழுவியல்.

அன்புடையீர், மதிப்பிற்குரிய நமது பாவாணர் அவர்கள் எழுதிய "வண்ணனை மொழிநூலின் வழுவியல்" என்ற பொத்தகத்தில் (9) ௯ ஆம் பக்கத்தில் 4. "தமிழின் தொன்மை" என்ற தலைப்பின் கீழ் "நில நூலியல் ஊழிகள்" (1) தொடக்க நிலையுயிர் ஊழி (2) முந்து நிலையுயிர் ஊழி (3) பண்டை நிலையுயிர் ஊழி (4) இடை நிலையுயிர் ஊழி (5) அண்மை நிலையுயிர் ஊழி என ஐந்து பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

அதில் 5-ஆவதாகக் குறிப்பிடப்பெறும் அண்மை நிலையுயிர் ஊழிப் பிரிவுப்பகுதியை 3 ஆம் மண்டலம், 4–ஆம் மண்டலம் என இரு மண்டலங்களாகப் பிரித்து அவற்றிலும் "நான்காம் மண்டலப் பிரிவும் காலமும்" :— என்று நான்காம் மண்டலத்தைப் பற்றி மட்டும் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. மூன்றும் மண்டலத்தைப் பற்றியும் "நில நூலியல் ஊழிகள்" பகுதியின் மற்ற நான்கு ஊழிகளைப் பற்றியும் இப் பொத்தகத்தில் குறிப்பிடவில்லை. இவற்றின் வரலாறு என்ன என்பதை என் போன்றவர்கள் எங்ஙனம் அறிவது?

— போ. பெருஞ்சித்திரன், எதுமலை

www.thamizham.net - Free E book No 7417

தமிழ் எண்கள்!

ஐயா,

நாம் இப்போது அரபி எண்கள் என்று அழைத்து வருகின்ற 1, 2, 3 முதலிய எண் வடிவங்கள் தமிழ் எண் வடிவங்களே என்னும் கருத்தினைப் பண்டாரகர் மு. வரதராசனார் தம் 'மொழி வரலாறு' எனும் நூலின் இறுதிக் கட்டுரையில் கூறியுள்ளார். அதுபற்றிப் பாவாணரய்யா அவர்களும் தாங்களும் யாது கருதுகின்றீர்கள் என்று தென்மொழியில் எழுதினால் பலருக்கும் உதவியாக இருக்கும். திரு மு. வ. அவர்களின் கருத்து உண்மையாயின் நமக்குப் பெருமை தானே!

மேலும், க, உ, ங முதலிய தமிழ் எண் வடிவங்கள் கணக்கிய லுக்கு இடர் தருவதையும், 1, 2, 3 முதலிய வடிவங்கள் எளியனவாக இருப்பதையும் நோக்கி இடையில் நம்மைவிட்டுப் போயிருந்த— நமக்கு உரிமையான—பின் கூறப்பட்ட எண்வடிவங்களை நாம் கையாள்வது நல்லதன்றோ? தென்மொழியில் பக்கங்களைக் குறிக்கத் தாங்கள் இருவகை எண்களையும் பயன்படுத்துவதை நோக்க, தாங் கள் பின்னவை வேற்று எண் வடிவங்கள் எனக் கருதுவதாகத் தெரி கிறது. விளக்கம் பெற விழைகிறேன். என் கருத்து என்னவெனில் பொதுவாக எல்லா இடங்களிலும் 1, 2, 3 முதலிய எண்வடிவங் களையே (நம் உரிமையை நிலைநிறுத்தி) வழங்கலாம். சிறப்பான இடங்களில் க, உ, ங முதலிய வடிவங்களைக் கையாளலாம். (எடுத் துக்காட்டாக பெரும் பிரிவுகளைக் குறிக்க நாம் இப்போது வழங்கு கிற I, II, III முதலிய உரோமன் எண்வடிவங்களை நீக்கிவிட்டு அவற்றிற்கு மாற்றாக க, உ, ங முதலிய வடிவங்களை வழங்கலாம்.)

— அன்பன் ச. இராமசாமி, சுவாமிமலை.

கிறித்துவமும்-சாதியொழிப்பும்

அருமை ஆசிரியருக்கு வணக்கம்.

இசை-8 'தமிழ்ச்சிட்டில்' 'சமய அமைப்புகளும் போலிக்காகவும், பூசலுக்காகவும் ஏற்பட்டவை' என்று எழுதியுள்ளீர். இந்து மதத் தைக் கருத்திற்கொண்டு பிற சமயங்களையும் அவ்வாறே மதிப்பிட்டுக் குறித்தமைபற்றி வருந்துகின்றேன். கிறித்துவச் சமயம்பற்றி யானறிந்த உண்மை சிலவற்றை நடுவுநிலை நின்று எழுத விழைந் துள்ளேன். பல்லாண்டுகளாக ஆங்கிலம், இலத்தீன் முதலிய மொழி

www.thamizham.net - Free E book No 7417

களில் கத்தோலிக்கர் து இறைவழிபாடு (Mass) தொழுகை முறைமை கள், முதலியன நடந்தேறின. ஆனால் உரோம் இரண்டாவது வத்திக் கான் பொதுக் கழகம் என்ற அமைப்பின் ஆய்வுக்குப்பின், இன்று சிலவாண்டுகட்குள் கத்தோலிக்கச் சமய வழிபாட்டு நடக்கைகள் தமி ழகம் முழுமையும் தனித் தமிழிலேயே நடந்தேறுமாறு மாற்றப்பெற் றன. மறைநூலான விவிலியம் (Bible) என்பதில் ஒரு பிரிவான 'நற்செய்தித்' (New Testament) தொகுதியை முழுக்கத் தனித்தமி ழில் மொழிபெயர்த்து வருகின்றனர். தேவையற்ற சடங்குகளை அகற்றி, அறிவுக்கும் உள்ளத்துக்கும் உகந்த செயற்பாடுகளையே இதுபோழ்து பின்பற்றி வருகின்றனர். தொழுகைகளில் உலக அருள் வளன், அமைதிநலன், குமுகாய நன்னெறி வாழ்முறை பற்றிய எண் ணுதிறன்-செயல் மேலோங்கும் மன்றுட்டு (Prayer) மறையுறை (Preaching) முதலியன நடத்தப்பெறுகின்றன. கத்தோலிக்கத் தாளிகை, கிழமை இதழ் போன்றவை தூய தமிழில் வெளியிடும் முயற்சிகள் விரைந்து தொடங்கப்பெற்றுள்ளன.

அடுத்து, புறவாழ்வில் துறவுசெல்லும் அடிகளார், கன்னிகையர் (Nuns) போன்றோர் கல்லூரி, உயர்நிலைப்பள்ளி, மருந்தகங்கள் தொழிற்கல்லூரிகள் முதலியன நடத்தி வருகின்றனர். சமயக்கருத்து களைப் பகுத்தறிவு ஆய்வு, அறிவியல் ஆய்வு முதலிய வழிகளில் அணுகி ஆய்ந்து உண்மை உணர-உணர்த்த வினைகளை மேற்கண் டுளர். ஆயினும் பேரளவு விழிப்பு ஏற்பட்டிலது. இறைப்படைப்பின னுள் மாந்தன் அயலானை உடன் பிறந்தவன் என்று கருதி 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று வாழும் நெறி செலுத்துவதே கத்தோ லிக்கத் திருமன்றின் நோக்கமாகும்.

ஆகவே போலியாகவோ, பூசலுக்காகவோ சமயம் ஏற்பட்டது என்று பொதுவாகக் குறித்திருப்பது சாலுமா என்பதைத் தெளிவு படுத்த வேண்டுகின்றேன்.

ஆயினும் மெய்யறிவாளர் (மெய் ஞானி) என்று தம்மைப் பெருமையோடு அழைத்துக் கொள்ளும் கிறித்தவரும் ஆரிய அடிமைத்தனத்தினின்றோ, இந்து நெறித் தளையினின்றோ விடுபட் டிலர் என்பது உண்மையே. கிறித்தவர்பாலுள்ள அவ்வுணர்வு நாணத்தக்கதும், வருந்துதற்குரியதும், உண்மைக்கு முரணானது மாகும். கல்வியறிவு பெற்று, பதவிகள் பெறுவோரும் சாதிப்பெயர் களை இணைத்துக்கொண்டும், சாதியடிப்படை மணவினை நடத்தியும்,

www.thamizham.net - Free E book No 7417

மறைமுகமாகச் சாதிப்போக்கை விடாப்பிடியாகக் கடைப்பிடித்தும் வருவதறிந்து அழுங்குகிறோம். எனவே சாதி ஒழிக்கும் முயற்சி மேற்கொள்ளத் தமிழகம் முழுதும் நடைபெற்ற 'இன்றைய இந்தியாவில் திருமன்று' என்ற கருத்தரங்கில் பலமுடிவுகளை எடுத்துள்ள. விரைவில் திருத்தம் ஏற்படும். இந்தியக் கத்தோலிக்கப் பல்கலைக்கழக மாணவர்கழக இளைஞர் தமது கருத்தரங்கில் (சேலம்கிளை) சாதிஒழிப்புத் தீர்மானங்களைத் தனித்தமிழில் எழுதித் தாளிகைக்கு விடுத்துள்ளோம். எனவே, யான் வெற்று விளம்பரத்திற்காக இதை எழுதவில்லை. பாவலர் உயர்திரு பெருஞ்சித்திரனர் இவற்றை நேரிலே கண்டும், கேட்டும் அறிந்தும் ஆய்ந்தும் தெளிய வேண்டுகிறேன். தாழ்த்தியும் உயர்த்தியும் நடத்தும் நோக்கம் எல்லாச் சமயங்களிலுமுண்டா?

— அ. அந்தோணிகுருசு, சேலம்–7.

நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் !

உலகத் தமிழ்க் கழக மாநாடு

வருகின்ற சிலை 5, 6 (திசம்பர் 20, 21) காரி, ஞாயிறு ஆகிய நாட்களில், உலகத் தமிழ்க் கழகத்தின் ஓராண்டு நிறைவு விழாவையும், திருவள்ளுவர் ஈராயிரமாண்டு விழாவையும், மொழிமுதறிஞர் பாவாணர் அவர்களின் "திருக்குறள் தமிழ் மரபுரை" வெளியீட்டு விழாவையும் ஒருங்கே இணைத்துக் கொண்டாடுகின்ற உ. த. க. மாநாடு முகவை மாவட்டத்தில் கூடவிருக்கின்றது.

தமிழன்பர்கள் அனைவரும் தங்கள் தங்கள் குடும்பத்துடனும் நண்பர்களுடனும் அம்மாநாட்டிற் கலந்து கொள்ள வேண்டிக் கொள்கின்றோம்.

மாநாட்டின் முழு விளக்கமும் அடுத்துவரும் இதழ்களில் அறிவிக்கப்பெறும்.

விரைவில் வெளிவரவிருக்கின்றன !

துரை-மாணிக்கம் எழுதிய

- சிறு பாவியக் கொத்து
- கனிச்சாறு (முதல் தொகுதி)

வெளியீடு பற்றிய முழு விளக்கமும் விரைவில் அறிவிக்கப்பெறும்.

www.thamizham.net - Free E book No 7417

பெயர் மாற்றக் கோரிக்கைப் படிவம்.

1. (அ) இப்பொழுதைய பெயர்
(ஆங்கிலத்தில், முழு வடிவில்)

(ஆ) இப்பொழுதைய பெயர்:
(தமிழில், முழுவடிவில்).

2. மாற்ற விரும்பும் பெயர்:
(முழுவடிவில், ஆங்கிலத்தில்)

3. மாற்ற விரும்பும் பெயர்:
(முழுவடிவில், தமிழில்)

4. பிறந்த இடமும், நாளும்:

5. தந்தையின் பெயர்:

6. இப்பொழுது உள்ள முகவரி:

7. நிலையான (வீட்டு) முகவரி:

இடம்:

நாள்: கையொப்பம்

படிகள்:

(1) காவல் துறைத் துணைப் பொதுக் கண்காணிப்பாளர்
(ஒற்றுப்பகுதி) சென்னை-4.
(Deputy Inspector-General of Police, (C. I. D.)
Madras-4.

(2) எழுது. அச்சுப்பொருள் இயக்குநர், சென்னை-1.
(The Director, Stationery and Printing, Madras-1.

(3) அரசினர் தலைமைச் செயலாளர், பொதுப்பணிப்
பொறுப்புக்குழு, சென்னை-9
(The Chief Secretary to Government,
Public S, C. Madras-9).

அன்பர்கள் பலரின் வேண்டுகோளுக்கு இணங்கிப் பெயர் மாற்றக் கோரிக்கைப் படிவத்தின் போலிகைப்படி வெளியிடப்படுகிறது. நிலையாகத் தங்கள் பெயரை மாற்றிக்கொள்ள விரும்பும் அன்பர்கள் இதுபோல் மூன்று படிகள் எடுத்து, மேற்குறித்த மூவரில் ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொரு படி விடுத்து வைக்கவும். பெயர் மாற்ற இசைவு அரசிதழ்ப் பதிவேட்டின் (GAZETTE)வழி அறிவிக்கப்பெறும்—ஆ-ர்

www.thamizham.net - Free E book No 7417

நூறாசிரியம்

துரை-மாணிக்கம்

பாட்டு-௧௧

மழையினும் இருளினும் மருளா யாமே
ஊரலர் உரைத்ததும் ஒழிகென் றொழித்துப்
புணர்ச்சி வேண்டிக் குறியிடஞ் சென்றாங்(கு)
அச்சந் தவிர்த்த பிழையு மொன்றே!
இளமை மடவோர்க் கேமம் வேண்டி
அறவோர் கொளுத்திய அறவுரை கொளாது
கொண்ட கொள்கையுங் களவின் மாறி
நயப்பு வேண்டி அவனுழைச் சென்றாங்கு
மடமை வீழ்த்திய பிழையும் இரண்டே!
காட்சி கவ்வியும் கைதொடத் தந்தும்
மீட்சி யின்றி யணைய வடங்கியும்
வரையா வொருவற்கு வயவுமே லீட்டு
நாண முகுத்த பிழையும் மூன்றே!
இளமுகை வெண்பல் துவர்வாய் கனியிதழ்
கிளர்முலை நுணங்கிடை தடங்குறங் கென்றவன்
காமுற்று மொழிந்த காலையும் ஏமுற்றுப்
பயிர்ப்பற வொடுங்கிய பிழையும் நான்கே!
என்றிவை வழி
நம்மருஞ் செல்வம் அவனத்தத் தந்தே
இம்மருங்கு பின்யா மழுங்கல
வெம்முது பெருநகை விளைக்குமா லெமக்கே!

பொழிப்பு :

மழை பொழிதரும் பொழுதும் இருள் மண்டிய இராக்காலத்தும் நாம் மருட்சியின்றி, ஊரார் அவனொடு கொண்ட தொடர்பு பற்றித் தூற்றிக் கூறிய இழிவுரைகளை ஒழிகென்று புறந்தள்ளி, அவன்பாற் பழகுதலை விரும்பி, குறிக்கப்பெற்ற இடத்தே சென்ற வகையில் நமக்

கியல்பாகிய அச்சத்தை நீக்கிய பிழை ஒன்றாகும். இளமைப் பருவத்தால் பேதைமை நிரம்பிய கன்னியர்க்குத், தம்மைக் காத்துக்கொள்ளும் பொருட்டு, உலகியலறமுணர்ந்த பெரியோர் கற்பித்துக்கூறிய ஒழுக்க வுரைகளைச் செவியிற் கொள்ளாது நாம் கடைப்பிடித்த உறுதிப்பாட்டையும் அவனொடு பழகிய களவுக் காலத்தே கைவிட்டுக் காதலை வேண்டி அவன் இருப்பிடம் சென்றவகையில் நம் அறியாமை போன்ற அடக்கத்தைக் கைநெகிழவிட்ட பிழை இரண்டாகும். அவனைக் காணுதற்குக் காந்துதலோடு அவாவியும், கண்டபின் நம் கைகளைத் தொட்ட அளவிலேயே அவற்றை அவன்பால் தந்தும், மீட்டுக்கொள்ளஃதின்றி அவன் நம்மை அணைத்தவிடத்து அவனுள் அடங்கியும், நம்மை மணந்து நில்லாத ஒருவனுக்காக வேட்கை மிகுதியால் வெட்கத்தை உகுத்துவிட்ட பிழை மூன்றாம். தோன்றிய அரும்பு போலும் வெள்ளிய பற்கள் என்றும், பவழம்போலும் சிவந்த வாயென்றும், கனிபோலும் குழைவுற்ற இதழ்கள் என்றும், கிளர்ச்சியுற்ற முலைகளென்றும், மெல்லியதாய் அசையும் இடையென்றும், பருத்த தொடையென்றும் அவன் மருவல் நோய் முற்றி மெல்லெனக் கூறியபொழுதும் அவன் மொழியான் இனபுற மயங்கி உடற்கியல்பாகிய கூசுதலுணர்வை ஒடுக்கிக்கொண்ட பிழை நான்காம். என்றிந் நான்கு வழியிலும் பெறற்கரியதாகிய நம் பெண்மைச் செவ்வியை அவன் நுகர்ந்து பொலிவழிக்கும்படி அவனிடம் நாமே வலியத்தந்து, இப் பிந்திய பொழுதில் தனித்து வருந்துதல், கொடுமை முற்றிய பெருத்த நகைப்பை எமக்குத் தோற்றுவிக்குமாக.

விரிப்பு: இப்பாடல் அகத்துறையைச் சார்ந்தது.

தலைவனொடு மணவாது ஒழுகிய தலைவி ஊரார் உரைத்த கௌவை மொழிக்காற்றாது வருந்த, தோழி தலைவியின் வருத்தத்திற்கு அவள் அறியாமையே காரணியமென்று உலகியல் அறங்கூறிப் புறத்தே நிற்கும் தலைவன் செவிப்பட இடித்துக் கூறியதாகும். இப்பாட்டு. அவள் பேதைமையால் ஆற்றிய வரையா வொழுக்கம் "வெம்முது பெருநகை விளைக்குமாறு" ஈண்டுப் படர்ந்தது என்பது தோழியின் கருத்து. பெருநகை, எள்ளற் பொருட்டு விளைந்ததென்க.

தலைவியின் இற்றைவருத்தத்திற்கு நான்குபிழைகள் பொருட்டுகளாயின. அவை: ஊரார் கூறும் அலர் மொழிகளுக்கும் மழைக்கும் இருளுக்கும் அஞ்சாது அவனொடு கூடுதல் வேண்டிக் குறித்தவிடம் நோக்கிச் சென்றது;

www.thamizham.net - Free E book No 7417

தன்போலும் பருவப் பெண்டிர் உலகியல் அளவில் ஈடுபடும் முறைமை குறித்து அறவோர் கூறிய அறிவுரைகளை எண்ணாது, தானே அறிந்தாள்போல் செருக்குற நடத்தல்வழித் தனக்காய அடக்கத்தை விட்டது;

பருவ உணர்வால் தன்னை மணந்து கொள்ளாத ஒருவன் தன்னைத் தீண்டுதற்கிடமளித்துத் தனக்கியல்பாகிய நாணத்தைக் கைவிட்டது;

காதன் மயக்கத்தால் அவன் தன்னை ஏமாற்றும் நோக்கொடு வண்ணித்த புகழுரைகளைக் கேட்டுக் கூசாது நின்று அவன் வழிப் பட்டது;

—"என்றிந் நான்கு பிழைகளுக்கும் தானே காரணியமாகி நின்று, தன் பொற்பழிந்த பின்றை இக்கால் கிடந்து வருந்துதலால் பயன் என்னை; நகைப்பிற்கிடமானது இவ்வருத்தம்" என்று தோழி, தலைவியின் அறியாமையைக் கடிந்தாள் என்க. இம்மொழிகளைத் தனித்து வருந்தும் அவள் மட்டும் கேட்குமாறு உரைத்தல் சால்பில்லை என வுணர்ந்த தோழி, தலைவன் வந்து புறத்தே நிற்றலை அறிந்து அவனும் கேட்குமாறு உரைத்தாள் என்க.

மழையினும் இருளினும் மருளா: மழைக்கும் இருளுக்கும் அஞ்சாது, அற்றைத் தன்னை நனைக்கும் மழைநீருக்கும், வெளிப்பட அருமையாய இருளுக்கும் அஞ்சாதாயினை. இற்றை ஊரார் உரைக்கும் பழிச்சொல்லாகிய மழைக்கும் வெளிப்பட அருமையாகிய இருள் போன்ற காவலுக்கும் அஞ்சுதல் ஆயினை எனும் கருத்துப்பட மொழிந்தாள் என்க.

ஊரலர்......ஒழித்து: ஊர்கூறும் பழிமொழிகளை அன்று நீ ஒழித்தாய்; இன்று உன்செயல் உன்னையே ஒழிக்கலாயிற்று என்னும் குறிப்புத் தோன்ற வுரைத்தாள்.

புணர்ச்சி வேண்டி: கூடுதல் விரும்பி.

குறியிடம்: கூடுதல் பொருட்டுத் தலைவனால் குறிக்கப்பெற்ற இடம்.

அச்சம் தவிர்த்தல்: பழிக்கும் தவறான ஒழுக்கத்திற்கும் வேண்டுவதாகிய அச்சம். தவிர்க்க வேண்டாத ஒன்றைத் தவிர்த்தாய்; இக்கால் அது நின்பால் தவிர்க்க வேண்டாதாக வந்து பற்றியது—என்றாள் என்க. அச்சம்—அஞ்சவேண்டுவ அஞ்சும் அறிவுடைமை.

www.thamizham.net - Free E book No 7417

இளமை மடவோர்: இளமைப் பருவத்து இயல்பாகிய பேதைமை நிரம்பியோர்.

ஏமம் வேண்டி: காவல் வேண்டி.

கொளுத்திய: அறிவுறுத்திய

கொள்கை: கைக்கொள்ள வேண்டிய கோட்பாடு.

களவின் மாறி: களவுக் காலத்தே கைவிட்டு.

நயப்பு: காதலிப்பு, விழைபாடு, விருப்பம்

மடமை வீழ்த்தல்: பெண்களுக்கு இயல்பாயதாகிய மடப்பத்தைக் கைவிடுதல். மடப்பம்—கொளுத்தக்கொண்டு, கொண்டது விடாமையெனும் அரும்பண்பு.

"அன்று நீ கொள்ளவேண்டிய மடப்பத்தைக் கொள்ளாது வீழ்த்தினை; இன்று அது நின்னை வீழ்த்திற்று; காண்"—என்றவாறு

காட்சி கவ்வுதல்: காணுதற்கான அவாவுணர்வு.

"அன்று நீ காட்சிக் கங்காந்தனை! இன்று நீ காட்சியின்றிக் குன்றினை"—என்றவாறு.

கைதொடத் தந்து. அவன் அன்று தொடுகையில் நீ நாணிப் பின்வாங்காது நாணுதலின்றி அவன் தொடுதலை நீயும் விரும்பினை; இன்று உன்னைத் தீண்டுவாருமின்றி இழித்துப் புறந்தள்ளப்பட்டாய் அன்று நாணமிழந்தனை; இன்று நாணமுற்றனை என்றவாறு.

மீட்சியின்றி: மீட்டுக்கொள்ளலின்றி.

அணைய வடங்கி: அணைத்தற்கு அடங்கி யுடன்பட்டு.

வரையா ஒருவன்: மணத்தால் உரிமையாக்கப்படாத ஒருவன்.

வரைதல்: அளவுப் படல்-எல்லையிடல் – உறுதியிடல் – ஆடவரும் பெண்டிரும் வரைதுறையின்றி விலங்கும் பறவையும் போற் கலத்தல் ஆறறிவு சான்ற மாந்தர்க்கு விலக்கப்பட்டதோர் ஒழுக்கமாகலின் அவர் ஈடுபாட்டிற்கு எல்லை வகுக்கப்பட்டது. இவனை இவளும், இவளை இவனும் என்று அளவுரைக்கப் பெறுவதே—எல்லை கட்டுவதே—உறுதிப்படுத்துவதே வரைதல் எனப்படும். வரைதல்—மணத்தல்.

வயவு: காதல் நோய்.

www.thamizham.net - Free E book No 7417

நாணம் உகுத்தல்: பெண்டிர்க் கியல்பாகிய நாணம். 'உயிரினும் சிறந்தன்று நாணே' என்றுரைக்கப்பட்டது.

இளமுகை: எழுச்சியுறும் அரும்பு.

துவர்: சிவப்பு-சிவந்த பவழம்.

குறங்கு: தொடை. உடல் பிளவுறும் பகுதியாதலின் குறங்கெனப் பெயரியது. கவைத்தொடக்கம்.

தடங்குறங்கு: பெரிய தொடை.

ஏமுற்று: மயங்குதலுற்று.

பயிர்ப்பு: பெண்களுக்கியல்பாகிய ஓர் அருவருப்பான கூசுதல் உணர்வு.

அறவொடுங்கிய: முழுதும் இலையெனும்படி ஒடுங்குதலுற்ற.

மணவாத ஒருவன் தன் உறுப்புகளைப் புகழ்ந்துரைக்கையில் கூசுதலின்றி அருவருப்படையாது அன்று கேட்டுக் கொண்டிருந்தனை! இன்று நீ உலகின் முன் கூசுதலையுடையையாய் அருவருப்படையப் பெற்றனை.

என்றிவை வழி: என்றிந்நான்கு வழியிலும்.

அவன்பால் செல்லுமுன் பழிசேருவதுபற்றிய அச்சத்தையும் இளமைத் துடிப்பால் மடப்பத்தையும், அவன்பால் பழகுமுன் நாணத்தையும், அவனொடு பழகுகையில் பயிர்ப்பாகிய கூசுதலையும் தவிர்த்த இந்நான்கு பிழைகளையும் முறையே செய்திராமல் இருப்பின், இக்கால் பொலிவிழந்து நீ வருந்தல் வெண்டியிராது என்றனள் என்க. இவை நான்கும் பெண் ஒருத்திக்கு இருக்கவேண்டிய அருமையுடைத்தான செல்வம் ஆகலின் அவற்றைத் துறந்தார் பெறுவது துன்பமே என்றாள் என்க.

நத்துதல்: விரும்பி நுகர்தல்.

நின் பெண்மை நலத்தை நீயே விரும்பி அவன் நுகருமாறு தந்தனை. இந்நிலை இரங்குதற்குரியதன்று; நகைத்தற் குரியதாம். வெறும் நகையன்று; பெரும் நகையாகும் என்றது காண்க. இனி இத்தகைய பிழைபாடுகள் பெண்டிர்க்கு வழிவழி வந்தும் இன்னும் அவர்பால் அவ்வொழுக்கக் கட்டுப்பாடுகள் இல்லாமலிருத்தல் முதுபெரும் நகை விளைத்தது என்றாள். இனி, இந்நகை மகிழ்ச்சியான் வருவதன்றி, சினத்தானும் அருவருப்பானும் வருதலால் வெம்முது பெருநகை என்று மொழிந்தனள் என்க.

www.thamizham.net - Free E book No 7417

தொடரோவியம் தொலைபேசி

"செங்குட்டுவன்"

காட்சி-12

காலவட்டச் சுழற்சியில் 38 யாண்டுகள் கழிந்தன. தி. பி. 1946-இல், நியூயார்க்கில் ஒருவர் பேசுவதை 3400 கற்றொலைவில் இருக்கும் சான்பிரான்சிசுக்கோவில் மற்றவர் கேட்கச் செய்யும் கருவி செயற்படத் தொடங்கும் நாள். பெல்லை மறக்காத அமரிக்கப் பெரு மக்கள், இக்கருவியை முறைப்படி தொடங்கி வைக்க வேண்டினர். நியூயார்க்குத் தொலைபேசியரங்கில் தலைமை அதிகாரிகளும் தாளிகை களின் அறிக்கையாளர்களும் பிறரும் கருவியைச் சூழ வுள்ளனர். பெல்லின் வருகைக்காகக் காத்திருக்கும் கூட்டத்தில் இருவர் உரை யாடுகின்றனர்.

(முன்பக்கத் தொடர்ச்சி)

வெம்முது பெருநகை: வெப்பஞ்சான்று முதுமையுற்ற பெருத்த நகை.

பெண்டிர் யாவரும் தமக்கியல்பாகிய அச்சத்தையும், மடப்பத்தையும், நாணத்தையும், பயிர்ப்பையும் தமக்குற்ற அருஞ்செல்வமாகக் கருதல் வேண்டும் என்றும், இளமைப் பருவமுற்ற பெண்டிரோ அவற்றைத் தம் பெருமைக்குரிய பண்புகளாகவும் உயிராகவும் கைக்கொள்ளுதல் வேண்டும் என்றும், அவ்வாறு கடைப்பிடியா விடத்து வருகின்ற இழிவும் இழுக்கும் தம்மைப் பெரிதும் துயர்ப்படுத்தும் என்றும், அத்துயர் பிறரை இரங்கச் செய்யாது எள்ளி நகைக்க இடந் தரும் என்றும், இவையே இளமை மடவோர்க்கு ஏமம்வேண்டி, அறவோர் கொளுத்திய அறவுரை என்றும் இப்பாட்டான் விளக்கப் பெற்றது.

இது குறிஞ்சி யென் திணையும், வரையா வொழுக்கத்து, ஊரலர் கண்டழுங்குந் தலைமகட்குத், தலைவன் செவிப்படுப்பத் தோழி அறிவுறீஇயது என் துறையுமாகும்.

www.thamizham.net - Free E book No 7417

ஒருவர்: பெல்லுடைய கண்டிப்பைப் பார்த்தீர்களா? தம் துணைவன் வாட்சன் மறுமுனையிலிருந்தால்தான் இந்த நியூயார்க்கு-சான்பிரான்சிசுக்கோவுக்கு இடையேயான தொலைபேசித் தொடர்பை முறைப்படி தொடங்கி வைக்கத் தாம் வரவியலும் என்று கூறிவிட்டாராம்.

மற்றொருவர்: இது தம் துணைவர்மேல் அவர் கொண்டுள்ள பெரும் பற்றைக் காட்டுகிறது. நண்பரே! தொலைபேசித் தொடர்பதிகாரிகளும் அவருக்குரிய மதிப்பளித்து அவர் விரும்பியவாறே செய்ய ஒப்புக்கொண்டு விட்டார்கள் அன்றோ?

முதலாயவர்: அறிவியலறிஞர்களுக்கு உரிய பெருமையை அளிக்கத் தானே வேண்டும். அதோ! பெல் வருகிறார் போலிருக்கிறதே!

(பெல் வந்து கருவியின் முன் அமர்கிறார்)

அதிகாரி யொருவர்: பேராசிரியர் அவர்களே! தொடங்கி வைக்கலாமே!

பெல்: சரி...(கருவியின் முன்) என் அன்பார்ந்த வாட்சனே! உடனே இங்கே வந்து சேர்.

வாட்சன்: (சிரித்து) நமது ஆய்வக அறைகளில் இல்லாததால் தங்கள் அழைப்பை நிமையத்தில் நிறைவேற்ற முடியாததற்கு வருந்துகிறேன். தலைவரே! நான் அங்கு வர வேண்டுமென்றால் குறைந்தது ஒருகிழமையாவது ஆகும். கடக்கவேண்டிய தொலைவு 3400 கற்கள் அன்றோ?

பெல்: (சிரித்துவிட்டு) இங்கே என்னை இதழறிக்கையாளர்கள் நெருக்குகிறார்கள். போ!

(இதழறிக்கையாளர்கள் பெல்லைச் சூழ்கின்றனர்)

அறிக்கையாளர்: பேராசிரியர் அவர்களே! நான் 'அறிவியல் அமெரிக்கா' தாளிகையின் அறிக்கையாளன். தாங்கள் ஒரு மின்சார வினைஞராகத் தொழிலைத் தொடங்கியிருந்தீர்களென்றால் இன்னும் பல கருவிகளைக் கண்டு பிடித்திருக்கலாம் அன்றோ?

பெல்: அதுதானில்லை. நான் ஒரு மின்சார வினைஞராக இருந்திருந்தால் — உறுதியாகச் சொல்கிறேன் — தொலைபேசியைப் பற்றி எண்ணி யிருக்கவேமாட்டேன்.

www.thamizham.net - Free E book No 7417

மற்றோர் அறிக்கையாளர் : பலர் பேசுவதையும் ஒரே கம்பியின் வழியாகச் செலுத்தி, வேண்டுபவருக்கு உரிய பேச்சை மட்டும் கேட்கு மாறு அனுப்பும் முறை இயல்வதொன்றா? இயலுமாயின் அதன் தன்மைகளை விளக்கிக் கூறுங்கள்.

பெல் : நான் தொலை பேசியை முயன்று கண்டு பிடித்தது உண்மை தான். ஆனால் அதனை அடிப்படையாகக் கொண்டு உலக முழுவதிலும் பலர் பலவகையான திறன்மிக்க அமைப்புகளைச் செய்து வருகின்றனர். உண்மையிலேயே அத்தகைய சிறந்த சில கருவிகளின் அமைப்பு என் சிற்றறிவுக்குப் புரியவில்லை. தாங்கள் கூறியவாறு ஒரே கம்பியில் பல பேச்சுகளை அனுப்பும் முறையை நமக்குப் பின் தோன்றும் சிறந்த அறிவியலறிஞர்கள் கண்டு பிடிக் கலாம்.

அறிக்கையாளர் : தொலைபேசியைக் கண்டுபிடித்தபின், அஃதா வது கி. பி. 1908-க்குப் பின் இன்று வரை தாங்கள் செய்து கொண் டிருந்தவை எவை?

பெல் : பொறிக் குறைபாடுள்ளவர்களுக்காகச் செவிடர் பள்ளி நடத்தி வருகிறேன். மேலும் என் பண்ணையிலுள்ள செம்மறிகள் ஒரே ஈற்றில் இரு குட்டிகள் ஈனுமாறு செய்தேன். கருவித் துறை யில் வேறெதுவும் நான் செய்யவில்லை.

அறிக்கையாளர் : இறுதியாக ஒரு கேள்வி. தங்கள் மேபெல் கேட்கவும் பேசவும் உதவக்கூடிய கருவியைக் கண்டு பிடித்தீர்களா?

பெல் : என்ன சொல்ல? என் மேபெல் இறுதி வரை செவிடி தான்! [காட்சி முடிவு]

— பின்னுரை —

தன் உளங்கவர்ந்த மேபெல் கேட்கவும் பேசவும் செய்ய வேண்டு மென்று முயன்ற பெல்லின் ஆராய்ச்சி, நாள் கழித்துக் கிடைக்கும் தானஞ்சல்களையும், குழப்பமிக்க அரிய முறையான தொலைவரியை யும் விழுமிய வழிச் செலவுகளையும் நீக்கி, உலகத்தின் ஒரு கோடி யிலிருப்பவர் பிறிதொரு கோடியிலிருப்பவருடன் நேரடியாக உரை யாடுவதே போலப் பேச உதவும் தொலை பேசிக் கருவியை நமக்கு அளித்தது. இத்தகைய சிறந்த ஆராய்ச்சி அறிஞரான பேராசிரியர் அலெஃசாண்டர் கிரகாம் பெல் கி பி. 1953இல் தமது 75ஆம் அக வையில் புகழுடம்பு எய்தினார். அன்று அமெரிக்காவிலுள்ள தொலை பேசிகள் அனைத்தும் ஒரு நிமையம் இயங்காது அமைதியாய் இருந்து தம் படைப்பாளரை நினைவு கூர்ந்தன.

மெய் வருத்தம் பாரார்; பசி நோக்கார்; கண் துஞ்சார்;
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் - செவ்வி
அருமையும் பாரார்; அவமதிப்பும் கொள்ளார்;
கருமமே கண்ணாயி னார்.

www.thamizham.net - Free E book No 7417

பாவாணரும் பாற்போலாவும்

"செங்குட்டுவன்"

"இந்நாவலந்தேயம் முழுவதும் பரவிப்பண்பாட்டின் உறைவிடமாகத் திகழ்ந்த தமிழர் ஆரியர் படையெடுப்பால் தம் நாடு நகரங்கள் அழிய, தென்கோடிக்கு மீண்டும் வந்து விட்டனர்" என்றால் நகைக்கிறார்கள். யார்? நந்தமிழர்களே! எவ்வாறு? "இந்தத் தனித்தமிழருக்கு, எப்பொழுதும் தமிழர்கள் உயர்ந்தவர்கள் என்னும் "பொய்யுரை"யும் 'போலியுரை'யும் கூறுவதே வழக்கமாயிற்று! அவர்கள் சிலவற்றில் உயர்ச்சி நாம் சிலவற்றில் உயர்ச்சி என்ற பொதுமை மனம் இவர்களுக்கு எப்பொழுதுதான் வரப் போகிறதோ?" எனக் கழிவிரக்கம் (!) கொண்டு.

1. "வானத்திலுள்ள நாள் கோள், ஓரை முதலியவற்றை விளக்கிக் கூறுவது (பண்டைத் தமிழரின்) வான நூல். இருபத்தேழு நாட்களும், ஏழு கோள்களும் பன்னிரோரைகளும் குமரிக் கண்டத் தமிழர் கொண்டிருந்தனர்.

"ஏழு கோள்களின் பெயரால் ஏழு நாட் கிழமையை முதன் முதல் ஏற்படுத்தியவர் தமிழரே. அது பின்னர் உலகம் முழுவதும் பரவியுள்ளது" என்றால் "இந்தப் பாவாணருக்கு வேறு வேலையே இல்லை" என்கின்றனர், அறிவியற்றிறம் நிரம்பியவராகத் தம்மை மதிக்கும் தமிழர்கள்.

3. "தமிழர்களின் சமயம் சிவனியமும் மாலியமுந்தாம். தமிழர் மதத்தைக் கெடுப்பதற்காக ஆரியர்கள் தம் பிரும்ம வழிபாட்டை இணைத்து இந்து மதம் என்ற கலவையாக ஆக்கி உருத்திரன், விட்டுணு, பிரும்மா ஆகியோரை வணங்கினர்; தமிழரை வணங்குவித்தனர். ஆரியர், சிவன் என்ற முழு முதற் றெய்வத்தை அறிந்தாரில்லை"

"இம்மதங்கள் யாவும் பிராமண மதங்களே! தமிழருக்குச் சமயமே கிடையாது" எனப் பகுத்தறிவால் நாம் கூறுவதைக் கைக்கொள்ளாது, இந்த மறைமலையடிகள் ஏதேதோ சொன்னார். அவர் சைவர். ஆனால் தேவநேயப் பாவாணர் என்ற இந்தக் கிறித்துவரும் — தம் சமய உயர்வைப் பேசுவதை விட்டுவிட்டுத், தமிழ

www.thamizham.net - Free E book No 7417

களின் சமயம் சிவனியமும் மாலியமுமே என நிலை நாட்டத் தொடங்கி விட்டார். இவையெல்லாம் நம்புதற்குரியனவா? — கேட்பவர்கள் தமிழர்கள் தாம்! பிற இனத்தாரல்லர்!

4. "பிறப்பு வழிக் குலப் பாகுபாடு பண்டைத் தமிழரிடம் கிடையாது" என்றால் இஃது ஏலுமோ? முழுப் பொய்யே" என்கின்றனர், ஒரு சிலர்.

அம்மட்டுமின்றி நம் நாட்டிலுள்ள பேராசிரியர்கள் பலர் — தமிழைப் படித்தவரும், பிறவற்றைப் படித்து விட்டுத் தம் குறை மிக்க தமிழறிவைக் கொண்டு குட்டை குழப்புபவர்களும், 'பாவாணர் சிறந்த ஆராய்ச்சியாளர்தாம்; (ஏதோ இவர்கள் ஒத்துக் கொண்டால் தான் போலும்!) எனினும் அவருடைய ஆராய்ச்சியுட் சில உன்னிப்பு வேலைகளே! பொருளோடு பொருந்தாதனவே!" என்கின்றனர். எவையெனக் கேட்டால் நழுவி விடுகிறார்கள். 'பாவாணர் ஆராய்ச்சியும் குறையுடைத்து' எனக் கூறி விட்டால் தாம் பெரிய திறனாய்வாளர் ஆன நினைப்பு இவர்களுக்கு! மறைமலையடிகளும் பாவாணரும் அளவைத் திறத்துடன் ஆய்ந்து கூறும் கூற்றுகளை ஏற்காத இவர்கள் எவனுவது மேலை நாட்டினன் என்னவாவது கூறினாலும் மறுக்காது நம்புகிறார்கள்.

சிந்து சமவெளி எச்சங்களைக் கணக்கிகளின் துணைக்கொண்டு ஆராய்ந்த பர். அசுக்கோ பாற்போலா தம் ஆய்வறிக்கைகளிற் கூறும் திராவிடரது (தமிழரது) சிறப்பை மறைக்க வியலாமல் வேறு வழியின்றி ஆரியத் தாளிகைகளும் வெளியிட்டுள்ளன. தி. பி. 2000 விடை கக (29—5—69) ஆம் நாளைய மதுரை 'இந்தியன் எஃசுப்பிரசு' முதற் பக்கத்திலேயே வெளியிட்டுள்ளது, "வானியலின் முந்தையர் சிந்து மக்களே!" என்னும் தலைப்பில் பர். பாற்போலாவின் இரண்டாவது ஆய்வறிக்கை பற்றிய செய்தியை!

1. சிந்து சமவெளியின் பண்டை மக்கள் திராவிடர்களே! ஆரியர்களின் படையெடுப்பாலோ அன்றி இயற்கை யழிவுகளாலோ இற்றைக்கு 4000 ஆண்டுகளுக்கு முன் இவர்தம் நகரங்கள் அழிந்தன.

2. வான நூலின் தந்தையர் எனப்படும் பாபிலோனியர், சுமேரியர் வானியலை அறிவதற்குப் பன்னெடுங்காலத்துக்கு முன்பே

www.thamizham.net - Free E book No 7417

திராவிட இனத்தவரான இச்சிந்து வெளி மக்கள் வானநூல் கணிய நூற் கணக்கீடுகளில் மேம்பட்டிருந்தனர்.

செவ்வாய் (Mars), காரி போன்ற விண்கோள்களை அறிந்த இவர்கள் அதன் வழி தம் இறைவர்களைச் சமைத்து வணங்கினர். திராவிடர்களின் வானநூல் பற்றிய இக்காண்பு வானநூல்வரலாற்றையே முழுமையாக மறுஆய்வு செய்ய வலியுறுத்துகிறது.

3. இந்துக்களின் இற்றைக் கடவுளரான சிவன், கருப்பன் (கிருஷ்ணன் எனத் திருமாலின் கரிய வடிவைக் குறிக்கிறார் போலும்) போன்றவற்றை முற்றும் ஒத்த இரு முகாமைக் கடவுளரையே இத் திராவிடர் வழிபட்டு வந்தனர். சிவன், கிருஷ்ணன் என்னும் தம் வழிபடு கடவுளர்கள் திராவிட மூலத்தினர் என உணரும்பொழுது இந்துக்களுக்குத் தொல்லையாகவே யிருக்கும். (இந்துக்கள் வேறு; சிவனியத்தார் மாலியத்தார் வேறு என்பது புரிகிறதா?) எனினும் இந்தியச் சமய நூல் ஆய்வாளர்கள் இதை ஒத்துக்கொள்ளத் தான் வேண்டும். எவரும் இதைப் பற்றி எண்ணியதாகவே தெரியவில்லை! (மொழிநூற் பேரறிஞர்கள் மறைமலையாரையும், பாவாணரையும் மேற்குறித்த சான்றோர் அறிய வாய்ப்பில்லை போலும்!).

4. இந்தியக் குலப் பிரிவுத் தோற்றம் சிந்துவெளி மக்களான திராவிடரிடம் தோன்றியதென்று கூறவியலாது. இந்து மக்களின் சமய, தொழிற் சிறப்புக் கூறுகள் படையெடுத்த ஆரியர்களின் குமுகாய முறைகளுடன் இணைந்தன என நாங்கள் நம்புகிறோம்.

தாம் அறியாததால் அல்லது தாம் முதன் முதற் கண்டு கூறாததால் பல்லாண்டுகளுக்கு முன்பே மறைமலையடிகளும் பாவாணரும் தம் மெய்யறிவாற் கண்டு கூறியதை — அதுவும் நம் இன உயர்வைப் பற்றிக் கூறியதை — ஒப்ப மறுக்கும் போலித் தமிழர்களே! இனிமேலாவது இவர் தம் மெய்யாய்வை ஒப்பி ஊக்குவீர்களா? மறைமலையடிகளாரின் பெருமையை உணராது அவரது எழுபத்தைந் தாம் அகவையிலேயே அவரை இழந்தோம். நம் ஊழ்வினைப் பயனாக இன்று நம்மிடையே உலவும் தனித் தமிழ் வேந்தர் பாவாணர் தம் கருத்துகளை விரித்தெழுதி வெளியிட வேண்டிய ஏந்துகளைச் செய்வீர்களா? நம் கடனைத் தீர்ப்பீர்களா?

அல்லது உலகின் முதல் இனம் தமிழினம்; முதல் மொழி "தமிழ்" எனக் கூறுவதையும் மேலை நாட்டு ஆய்வாளன் ஒருவன் சரியெனக் கூறுமட்டும் காத்திருந்து மெய்ப்பொருளை இழப்பீர்களா?

www.thamizham.net - Free E book No 7417

மாந்தனுக்கு முன் புதையுயிர்த்தடங்கள் அல்லது கல்மாறிகள்.

த. சலாவுத்தீன், அறி. இ., ஆ. ப.

இந்நில உலகம் தோன்றிப் பல இலக்கம் ஆண்டுகள் ஆகின்றன. இந்நில உலகில் மாந்தன் தோன்றி ஏறத்தாழ ஓர் இலக்கம் ஆண்டுகள் ஆகின்றன. இந்நில உலகம் தோன்றிய பிறகு முதன் முதலில் உயிரினங்கள் வாழ்ந்த காலம் 3000 இலக்கம் ஆண்டுகளுக்கு முன்பே இருத்தல் வேண்டும் என்று கருதப்படுகிறது. படிப்படியாக அன்றிருந்த உயிரினங்களில் பல மாறுதல்கள் ஏற்பட்டுப் புதிய புதிய உயிரினங்கள் தோன்றின. இவை தோன்றிய காலவரையறைகளை அறிந்துகொள்ள ஒரு தனி இயலே இருக்கின்றது. இதற்குப் 'புதையுயிர்த்தட இயல்' (Palaeontology) என்று பெயர். வரலாறு எழுதத் தொடங்கியதற்கு முன்பே 'புதையுயிர்த் தடங்கள்' மாந்தனைக் கவர்ந்துள்ளன. அப்பொழுது அவற்றைப்பற்றி ஆய்ந்து எண்ணுமையால் பல கருத்துகள் வெளியிடப் பட்டன. அவற்றில் ஒன்று, "இவை விவிலியத்தில் (Bible) கூறப்பட்ட வெள்ளத்தில் இறந்துபோன உயிரினங்களின் எலும்புக் கூடுகளாக இருத்தல் கூடும்', என்பதாகும்.

முதன் முதலில் கிரேக்க அறிஞர்கள் இவற்றின் உண்மை நிலையை அறிந்து கூறினர். முதலில் சீராக இதைப்பற்றி ஆய்ந்தவர் வில்லியம் சிமித்து (William Smith) (1769—1839) என்ற ஆங்கிலேயரே ஆவார். இவர் நீர்ப்பாசனத்திற்காகக் கால்வாய்கள் வெட்டும்போது பல 'புதையுயிர்த் தடங்களை'க் கண்டெடுத்து அவற்றைப்பற்றி ஆய்ந்தார். இவற்றின்மூலம் மாந்தனுக்கு முன்பிருந்த உயிரினங்கள், அவற்றில்ஏற்பட்ட படிப்படியான மாற்றங்கள் ஆகியவற்றைத் தெரிந்துகொள்ள முடிகின்றது. 1,000,000,000, ஆண்டுகளுக்கு முன்பிருந்தே உயிரினங்கள் இருந்திருக்கின்றன. ஆனால், 500,000,000 ஆண்டுகளாக ஏற்பட்ட மாறுதல்கள்தாம் சீராக மாந்த வரலாற்றில் வியத்தகு முறையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

www.thamizham.net - Free E book No 7417

புதையுயிர்த் தடங்கள் அல்லது கல்மாறிகள் என்றால் என்ன?: விலங்குகள் அல்லது நிலைத்திணைகள் நிலத்தில் புதைந்து இறுகிக் கல்லாக மாறிப்பாறைகளோடு சேர்ந்துள்ளவற்றைப்புதையுயிர்த்தடங்கள் (Fossils) என்கிறோம். இப் புதையுயிர்த்தடங்களிலிருந்து பல இலக்கம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலைத்திணைகள், விலங்குகள் ஆகியவற்றைப் பற்றி அறிந்துகொள்ள முடிகின்றது. நாமும் பல புதையுயிர்த்தடங்களைப் பார்த்திருப்போம். ஆனால் அவற்றை ஆராய்ந்து அறிந்துகொள்ளும் உணர்வு இல்லாததாலோ, திறன் இல்லாததாலோ அதைப்பற்றி அறிய முனையவில்லை. புதையுயிர்த் தடங்களில் பெரும் பகுதியானவை. அன்று கடலில் உயிர் வாழ்ந்த உயிரினங்களின் ஓடுகள், எலும்புக்கூடுகளே ஆகும். எடுத்துக்காட்டாக 'மீன்-பல்லி' யைத் (Ichthyosaurus) கொள்ளலாம். பாறைகளிலுள்ள இவற்றின் புதையுயிர்த்தடங்களிலிருந்து இவை உயிருடன் இருந்த போழ்து என்னென்ன அமைப்பில் இருந்திருக்கும் என்று அறிந்துகொள்ள முடிகிறது. இவற்றைப் போன்ற கணக்கற்ற உயிரினங்கள் கடலில் வாழ்ந்து மறைந்துள்ளன.

. நிலக்கரிச் சுரங்கங்களில் மிகப் பழங்கால நிலைத்திணை வகைகளின் புதையுயிர்த்தடங்கள் காணப்படுகின்றன. இப் புதையுயிர்த் தடங்களின் அமைப்பைக் கண்டு, இவை உயிருள்ளபோது எவ்வாறு இயங்கி இருக்கும் என்று கற்பனை செய்வோமானால் மனக்கண்முன் மீன்பல்லி நீரின் மேற்பரப்பில் நீந்திச் சென்று தன் தாடைகளினால் மீன்களைப் பிடித்து உண்பதைக் காணலாம். இன்னும் நூறு இலக்கம் ஆண்டுகளுக்கு முன் இருந்த சதுப்பு நிலங்களில் வாழ்ந்த நிலைத்திணை வகைகள், அவற்றில் இருந்த பெரிய மலர்கள் ஆகியவற்றைக் காணலாம். இவ்வாறு கற்பனையில் பல்லாண்டுகளுக்கு முன் இருந்த உயிரினங்கள், நீந்துவதையும், தம் உணவிற்காக வேட்டையாடுவதையும், சண்டையிடுவதையும் காண்பது கண்கொள்ளாக் காட்சியாகும். அப்போதுதான். மண்ணை வெட்டிப் பாறைகளை உடைத்து இன்னும் புதிய, புதிய புதையுயிர்த்தடங்களைக் கண்டறியும் புத்துணர்ச்சி உண்டாகும்.

புதையுயிர்த்தடங்கள் எவ்வாறு உண்டாயின?: இறக்கின்ற எல்லா உயிரினங்களும் புதையுயிர்த்தடங்களாக மாறுவதில்லை. அது மட்டுமல்லாமல் ஒருகுறிப்பிட்ட முறையில் புதைந்திருத்தல்வேண்டும். புதையும் விலங்கினத்தின் கடினமான பகுதிகள், ஓடுகள்-எலும்புகள்,

www.thamizham.net - Free E book No 7417

பற்கள் போன்றவையே காக்கப்படுகின்றன. கிடைத்துள்ள விலங்கினங்களின் புதையுயிர்த்தடங்களின் 75 விழுக்காட்டு உயிரினங்கள் நீரில் வாழ்ந்தவையாகவே இருக்கின்றன.

கடல், ஏரிபோன்ற நீர் நிலைகளில் உயிரினங்கள் இறந்து, நீரில் மூழ்கிவிடுகின்றன. இவற்றின்மேல் மண்படிந்து, அவற்றின் மென்மையான பகுதிகள் சிதைந்து விடுகின்றன. எலும்புகளும், பற்களுமே தங்குகின்றன. காலவட்டத்தில் மிகுதியான மண் மேலும் மேலும் அவற்றின் மீது படிந்து விடுகின்றது. பல ஆண்டுகளுக்குப் பிறகு நிலத்தின் அடியில் ஏற்படும் அதிர்ச்சியால் கடல்கள், ஏரிகள் ஆகியவற்றின் அடித்தளம் மேல்நோக்கி வந்து, காய்ந்த நிலமாக மாறுகின்றது. மண்ணுள் புதைந்துள்ள ஓடுகளும் இறுகிக் கற்களாக மாறிப் புதையுயிர்த்தடங்களாகி விடுகின்றன. நிலைத்திணைகளின் புதையுயிர்த்தடங்களும் இதுபோலவே உண்டாகின்றன. வரலாறு கற்கும்போது 300 ஆண்டுகள் என்பது மிக நீண்ட காலம் என்று நினைக்கின்றோம். ஆனால் புதையுயிர்த்தடங்களின் காலத்தைக் குறிப்பிடும்போது 250 நூறு இலக்கம் ஆண்டுகள் (250,000,000) என்று கூறுகின்றார்கள்.

புதையுயிர்த்தடங்களைப்பற்றிக்கூறும் இயலுக்குப் 'புதையுயிர்த் தடஇயல்' (Paleontology) என்கிறோம். இது பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1. விலங்கினப் புதையுயிர்த்தட இயல் (Paleozoology)
2. நிலைத்திணைப் புதையுயிர்த்தட இயல் (Paleobotany)
3. நுண்ணுயிர்ப் புதையுயிர்த்தட இயல் (Micropaleotology)

என்பவை அவற்றில் சில,

நிலைத்திணைப் புதையுயிர்த்தடங்கள்: நீருக்கடியில் வீழ்ந்து பிறகு மண்ணால் மூடப்பட்ட மரஞ் செடி கொடிகளால் உண்டாகின்றன. எரிமலையினால் உண்டாகும் சாம்பலின் அடியில் மிகுதியான புதையுயிர்த்தடங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக கொலராடோ (Colorado) என்னும் இடத்தில் 150 வகையான நிலைத்திணைகள், அவற்றின் இலைகள், விதைகள், கனிகள் ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை 30 நூறு இலக்கம் ஆண்டுகளுக்கு முன் ஓர் ஏரி எரிமலைச் சாம்பலினால் மூடப்பட்டபோது உண்டான தடங்களாக இருத்தல் வேண்டும் என்று கூறப்படுகின்றது.

www.thamizham.net - Free E book No 7417

நிலத்திணைப் புதையுயிர்த்தடங்கள் இரண்டு வகைப்படும். ஒன்று 'நேர்த்தடம்' (Direct fossils) இரண்டாவது 'மறைமுகத் தடம்' (Indirect fossils). 'நேர்த்தடங்களில்' உண்மையான நிலைத் திணையின் சில பாகங்கள் அப்படியே கல்லாக மாறி இருக்கும். 'மறை முகத்தடங்களில்' உண்மையான நிலைத்திணைக்கு மாறாக அதன் அமைப்பு அப்படியே மற்ற பொருள்களால் இயற்கையிலேயே ஆக்கப் பட்டிருக்கும். நிலைத்திணைப் புதையுயிர்த்தடங்களிலிருந்து நில உலகில் உயிரினம் எப்பொழுது உண்டாயிற்று என்று கூறுவது இயலாத தொன்றுகும். எப்பொழுது உயிரினங்கள் வாழத் தொடங்கின என்பதையும் திட்டமாகக் கூறவியலாது. ஆனால் முதன் முதலில் வாழ்ந்த உயிரினங்கள் உறுப்பிலகப் பொருளிலிருந்து (Inorganic Substances) தம் உணவை உண்டாக்கிக் கொண்டன. இதை நிலைத் திணைகளே செய்கின்றன. ஆகையால் முதன் முதலில் தோன்றிய உயிர்ப் பொருள் நிலைத்திணைகளே ஆகும். அல்லது நிலைத் திணை களின் பண்புகளைக் கொண்ட விலங்கினங்களாகவும் இருக்கலாம்.

பயன் : புதையுயிர்த்தடங்களின் மூலம்,

1. நிலத்தின் அமைப்புப் பற்றி அறியலாம். 2. உயிரினங் களின் உருவ அமைப்பு, அவற்றில் ஏற்பட்ட மாறுதல்கள், அவற் றின் காலம், ஆகியவற்றை அறிய முடிகின்றது. கன்னெய் (பெட் ரோல்) நிலக்கரி, சுண்ணும்புக் கல், காரீயம், துத்தநாகம் ஆகிய வற்றைக் காண, இவ்வியல் மிகப் பயன்படுகின்றது. இன்னும் இந்த இயலில் பல ஆராய்ச்சிகள் நடத்திக் கொண்டே இருக்கின்றார்கள். O

"என் இயக்கம் பற்றிய சில விளக்கங்கள்"

'தென்மொழி'யை விரிவுபடுத்தவும் நிலைப்படுத்தவும் ஆன பல முயற்சிகளிலும் ஈடுபட்டு அடிக்கடி வெளியூர்ச் செலவு மேற்கொள்ள வேண்டியிருப்பதால், "என் இயக்கம்" கடந்த மூன்று இதழ்களி லும் இவ்விதழிலும் வெளியிட இயலவில்லை. அடுத்த இதழிலிருந்து கட்டாயம் தொடரும். அன்பர்கள் பொறுத்தருள்க.

— பெருஞ்சித்திரன்.

www.thamizham.net - Free E book No 7417

[8-ஆம் பக்கத் தொடர்ச்சி]

இனியேனும் மாணவர்க்கிடையில் நடைபெறுகின்ற இப்போட்டி பூசல்களில் தக்க அமைவு ஏற்படும் என்று எண்ணுகின்றோம். மேலும் தமிழக அமைச்சர்கள் தமிழ் மருத்துவக்கல்லூரி மாணவர்களுடைய கோரிக்கைகளையும், ஆங்கில மருத்துவக்கல்லூரி மாணவர்களுடைய வேண்டுகோளையும் உடனே தனித்தனியாகக் கவனித்து ஆவன செய்யக் கேட்டுக்கொள்கின்றோம். மேலும் 1964-இல் தொடங்கிய தமிழ் மருத்துவக்கல்லூரிப் பயிற்சியாளர்களில் 26 பேர், வரும் 69 நவம்பர் திங்களிலும், 25 பேர் 70, சூன் திங்களிலும் வெளியேவரவிருக்கின்றனர் என்று அறிவிக்கப்பெறுகின்றது. அவர்களுக்கு வேலைவாய்ப்பிற்கென எவ்வகை உறுதியும் இதுவரை செய்யப்பெறவில்லை. இக்கல்லூரியினின்று வெளிவரும் தமிழ் மருத்துவப் பட்டம் (B. I. M.) பெற்றவர்கள் ஆங்கில மருத்துவப் பட்டம் (M. B. B. S.) பெற்றவர்களைப் போலவே மதிக்கப்பெறுவர் என்று சட்டப்படி அறிவிக்கப் பெற்றிருப்பது போலவே, நடைமுறையிலும் அவ்வாறே எந்த வேறுபாடுமின்றி அவர்களைக் கருதுமாறு தமிழக அரசினரைக் கேட்டுக்கொள்கின்றோம். இந்தச் சூழ்நிலையில் பொதுவாக நாம் கூறிக்கொள்ள விரும்புவது இதுதான். தமிழன் தன் மொழியைப் பேணாது விடுவானாயின், அவன் நாட்டை, அவன் பண்பாட்டை, அவன் கலைகளை, அவன் பெருமையை, ஏன் அவனையே இழந்தவனாகி விடுவான். எனவே தன்னை இழப்பதற்குள்ளாகிலும் தமிழன் விழிப்புற்றெழ வேண்டும். அவனுக்குக் கொள்கை நோக்கும் வழிகாட்டியும் போராட்டக்கருவியும் தமிழ்தான்! அதனைக் கைவிட்டுவிட்டு அவன் ஓர் இம்மியும் முன்னேற முடியாது என்பதற்குத் தமிழ் மருத்துவமே சான்று. தழைக தமிழ் மருத்துவம்!



மொழிப் பேரறிஞர்

ஞா. தேவநேயப் பாவாணரின்

திருக்குறள் தமிழ் மரபுரை

அச்சாகிக் கொண்டுள்ளது.

திசம்பரில் நடைபெறும் உ. த. க. மாநாட்டில் வெளியீட்டு விழா நடைபெறும்.

---

www.thamizham.net - Free E book No 7417

(சுவடி 7 - ஓலை 3, ௪௪-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அறிவியற் கலைச்சொற் பட்டி – 3

(அழகப்பர் தமிழ் மன்றம், காரைக்குடி)

(I)

Igneous Rock - எரி பாறை
Ignition - கொளுத்துதல்
Ionosphere - மின்னணு வெளி
Image Real - உண்மை நிழல்
Image Virtual - நிழற் போலி
Impedance – இரு திசை மின் தடை
Incondescent Filament - வெள் எரிழை
Individuality - தனித்தன்மை
Inductance - தூண்டு திறன்
Inductor - தூண்டுவான்
Induction Coil - தூண்டு சுருள்
Induction - தூண்டல்
Inductive Reactance - தூண்டத் தடை
Inertia – சுணக்கம்
Inertia Frame- சுணக்கக்கூடு
Infra Red Ray - கீழ்ச் சிவப்புக் கதிர்
Infinite Decimal – சுழி நெருங்கிகள்
Ingredients – இயை மூலங்கள்
Inlet - நுழை வாய், நுழை வழி
Input - உள்ளீடு
Instantaneous - அந்த (அதே) நொடியில்
Insurance - காப்பு ஈட்டுறுதி
Integral Multitude - முழு எண் மடங்கு
Integration - ஒருங்கிணைப்பு
Intensive - செறிந்த
Inter Cooler - இடைக் குளிர்ப்பி
Interference - குறுக்கீடு
Intestinal Juice - சிறு குடற் சாறு
Introverts – அக நாட்டத்தினர்
Inverse Function - எதிர்ச் சார்பு
Irritability - உறுத்துணர்ச்சி
Isobars - சம அழுத்தக் கோடுகள்
Isobar - ஒரு நிறையான்
Isomer - சம தனிமக் கூட்டுகள்
Isothermal Change - மாறு வெப்ப நிலை மாற்றம்
Isotone - சம மின்னிலிகை
Isotope - ஓரினத்தான்

(J)

Joint - இணைப்பு
Joist - துலாக் கட்டை, பாவுக் கட்டை

(K)

Katabolism - சிதை மாற்றம்
Key Block – மையக் கட்டை
Kiln - சூளை
Kinematics - (பாய்ம) இயக்கவியல்
Kinetics - (பாய்ம) இயக்குவியல்
Knocking - அதிர வைத்தல்

(L)

Laboratory - ஆய்வகம்
Lamination - தகட்டு வடிவம்
Landing - ஒய்வுப்படி
Landscape Plane - இயற்கை எழிற் படம்
Latent Heat - உள்ளுறை வெப்பம்

www.thamizham.net - Free E book No 7417

Latex - நிலைத்திணைப் பால்
Latrine – கழிப் பறை
Latitude - படுகைக் கோடு
Lead - ஈயம்
Leakage - கசிவு
Least Count – மீநுண்ணிய
Lenko Cytosis - வெள்ளணுப் பெருக்கம்
Lenko Penia – வெள்ளணுக் குறைவு
Lens - ஒளி வில்லை
Lifting Power - தூக்கு திறன்
Light Source - ஒளி மூலம்
Linear Accelerator - நேர்வழித் [துகள் முடுக்கி
Line Diagram - வரிப் படம்
Linseed Oil - ஆளி விதை [நெய்
Lintel - தண்டியம்
Liquid - நீர்மம்
Liquid Manure – நீர்ம உரங் [கள்
Load – சுமை, பளு
Load Factor – பாரக் காரணி
Logaritham-அடுக்கெண்
Longitudinal Wave – நீள் அதிர்வு அலை
Long Sight – எட்டப் பார்வை
Loudness – ஒலி உரப்பு
L' Type Fitter – தூண்டு வகை வடிப்பான்
Lubricant – உயவுப் பொருள்
Lumnioscene – ஒளி நீர்மை
Lymph – நிண நீர்

(M)

Magnetically Coupled Circuits - காந்த விணைப்பு சுற்றுகள்
Magnetising Force – காந்த மேற்று விசை
Megnetic Compass - காந்தத் [திசை முள்
Magneto Motive Force - காந்த இயக்கு விசை
Magneto Static Field – நிலை காந்தப் புலம்
Magnitude – எண் மதிப்பு
Malleablity – தகடாகுந்தன்மை
Man Hole – ஆள் வழி
Mars - செவ்வாய்
Masonry – சுவர்
Mass – பொருண்மை
Maternity Home – ஈனில்
Maximum – மீமிகை
Mean Value – சராசரி மதிப்பு
Measles – தட்டம்மை
Measurement - அளவை, அளவு
Mechanical Equavalent of Heat – வெப்பத்தின் சம எந்திர ஆற்றல்
Median – நடு மதிப்பு (Statistics)
Medium – ஊடகம்
Membrane – மென்தோல் நுண் தோல்
Mercury – இதள்
Meridian – புவி முனை இணைக் கோடு
Metal - மாழை
Metallurge – மாழையியல்
Metamorphic Rocks – உரு மாற்றப் பாறைகள்
Micro Organisms – நுண் ணுயிர்கள்
Mineral - கனிப் பொருள்
Mineral Aggregate Method – கனிமத் தொகுப்பு முறை
Minimum – மீகுறை
Mode – நிகழ் மதிப்பு
Moderator – தணிப்பான்

www.thamizham.net - Free E book No 7417

Molten – உருகிய
Momentum – உந்து விசை
Movement of under ground water – நில நீர் இயக்கம்
Monkey Owl – குரங்கு முகக் கூகை
Monochromatic - ஒரு நிறமான
Moon - திங்கள்
Moon faced Scrcachers – நிலவு
Mould–வார்ப்பச்சு [முகக்கூகை
Mucous Membrane - கோழைப் படலம்
Mumps – மண்ணை வீங்கி
Murrum – செம்பரல்
Mutation - திடீர் மாற்றம், பண்புத் திரிபு

(N)

Nassal Fossa – மூக்குக் குழி
Natural Gas – இயற்கை வளி
Natural Selection –இயற்கைத் தேர்வு
Negative Ion – எதிர் மின்னணு
Negative Terminal – எதிர் மின் முனை
Nucleus – அணுக் கரு
Nucleons – கருப் பொருட்கள்
Nuclear Bombardment - கருத் தகர்ப்பு
Nuclear Force - கரு விசை
Nuclear Gun-கருத் தாக்கி
Nuclear Transformation - கரு மாற்றம்
Neutral – நடுநிலை
Neutral Axis - நடுநிலையச்சு
Neutral Equilbrium - நடுநிலை சமநிலை
Neutral Terminal – நடுநிலை முனை
Neutralization – நடுநிலைப் படுத்துதல்
Nitrate – காலக முவுயிரி
Nitregen – காலகம்
Normal - சீரான
Non Linear - ஒரு படியற்ற
Optics - பார்வையியல், ஒளி
NorthPole–புவிவடமுனை [யியல்

(O)

Oblique – ஒழுங்கிலா
Observation – கவனிப்பு
Oceanography – கடலியல்
Odd – ஒற்றை
Opaque - ஒளியூடா
Optics – பார்வையியல், ஒளி
Orbit – சுற்றுப் பாதை [யியல்
Oscilation - அலைவு
Output – வெளியீடு
Oven – அடுப்பு
Overlap - மேற்படிவு
Owlet – சிற்றுந்தை
Oxide - உயிரி
Oxygen – உயிரியம்

(P)

Paint (வண்ணம்) பூச்சு
Pale – வெளிறிய
Pancreatic Calculi – கணையக் கற்கள்
Panelled Door - இதழகக் கதவு
Parabola - பர வளைவு
Parachute - மிதவைக் குடை
Parallax Error – தோற்றப் பிழை
Paramagnetism - காந்தக் கவர்விப்பு
Parasite - ஒட்டுண்ணி
Parliamentany Hinge - ஓரகத் துகட்பாடு
Paving – பாவுதல்
Paving tiles - தள ஓடுகள்
Peak Valve - முகட்டளவு
Pectoralis
(a) Major - தோள் பெருந்தசை
(b) Minor – தோள் சிறு தசை
Pen - தூவல்

www.thamizham.net - Free E book No 7417

தென்மொழிக்கு நன்கொடை

4—11—68 முதல் 27—11—68 முடிய, தென்மொழி வளர்ச்சியில் அக்கறையும் ஆர்வமும்கொண்ட அன்பர்கள்விடுத்த நன்கொடைப் பட்டியல் வருமாறு. ஒல்லும் வகையில் அறவினை ஒம்பும் அத்தமிழ் நெஞ்சங்களுக்கு நம் நன்றியும் வாழ்த்தும் உரியவாகுக.

		உரு.காசு
1.	திரு. நாவை. சிவா, ஆசிரியர், கீரனூர்	5–55
2.	திரு. அ வேளாங்கண்ணி, வான்படை, மே./பா. 56-ஏ. பி. ஓ.	10
3.	சி. சுப்பராயலு, (வளர்மதியன்) திருச்சி-14	2
4.	திருவினர். இரா. ஆறுமுகன், ப. கு. சுப்பையன், பு. கா. பாலசுப்பிரமணியன், சா. இளமுருகு. நடராசன், அ. மாரிமுத்து. மறைமலையடிகள் மன்றம், பு. புளியம்பட்டி.	7
5.	திருவினர். கோ. மு. பெருமாள், ப. முருகவேள், மேற்கு மாம்பலம், சென்னை—33. (நவம்பர்)	2
6.	திரு. மா. இராமசாமி, ஆசிரியர், கோபிபாளையம்.	2
7.	திருவினர். கோ. மு. பெருமாள், ப. முருகவேள், மேற்கு மாம்பலம், சென்னை—33. (டிசம்பர்)	2
8.	திரு. ப. இளம்வழுதி. உரத்தநாடு	5
9.	செயலாளர், மறைமலையடிகள் மன்றம், பு. புளியம்பட்டி	6
10	திரு. சி. தேவசேனன், நந்தம்பாக்கம், சென்னை-16.	1
11	திரு. து. துரைராசு, தலைமை மேலாளர், பாரத் மண்ணகர்ப் பொறியகம், கோ. த. வ	5
12.	திரு சு. சையத் அசீமுதீன், மேலாளர், கோ. த. வ.	3
13.	பூ. சா. சேசன், துணை மேலாளர், கோலார் தங்க வயல்.	2
14.	திரு. பெ. சந்திரசேகரன், தலைமை மேலாளர், கோ. த. வ.	2
15.	திரு. வி. அமலநாதன், மேலாளர், கோ. த. வ.	2
16.	திரு. இராம. வயிரவன், மேலாளர், திட்டத்துறை, பா. ம. பொ, கோ. த. வ.	2
17.	திரு. சு. கண்ணன், மேலாளர், ஷை	2
18.	திரு. செந்தில் விநாயகம், இணைப்பகம், (Assembly Dept.,) ஷை	2
19.	திரு. சின்னச்சாமி, மேலாளர், திட்டத்துறை, ஷை	2
20.	திரு. முகவை. இமயவரம்பன், திருக்கொட்டிக்காடு.	1

— அமைச்சர், தென்மொழி.

www.thamizham.net - Free E book No 7417

பாவேந்தர் பாரதிதாசன் விழாவில் பாப்பொழிவு!

— (பெருஞ்சித்திரன்) —

[நீலமலை, பெகும்பகல்லா திருவள்ளுவர் மன்றச் சார்பில், விடை கஉ (14—6—69)இல நடைபெற்ற பாவேந்தர் பாரதிதாசன் விழாவில் தலைமை தாங்கி, விழா மன்றத்தினர் விரும்பிக் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஆற்றிய பாப்பொழிவு இது. தென்மொழி யன்பர்கள் பயனடையும் பொருட்டு இங்கு வெளியிடப் பெறுகின்றது.]

பேரன்பு மிக்க பெரியோரே! தாய்மாரே!
ஈரத் தமிழால் எனைவர வேற்ற
பெகும்ப கல்லா வள்ளுவர் மன்றத்துத்
தகுதமிழ் அன்பரீர்! தமிழ்நலம் சான்ற
பேரா சிரியீர்! புலவரீர்! வணக்கம்.
பாரதி தாசன் நினைவு விழாவிது!
இவ்விழா விற்கெனைத் தலைமை ஏற்றிட
ஒவ்வி அழைத்த உழுவலன் புடையோர்
அனைவர்க் கும்என் அகம்நிறை நன்றி!
இனைய நல்விழா எந்தமிழ் நாட்டில்
ஊர்தொறும் நடைபெறும் காலம் எதுவோ? —
பார்தொழும் பாரதி தாசனார் பாநலம்
சிறுவர் வாயிலும் பயிலும்நாள் எதுவோ? —
அதுவே தமிழர் விழிப்புற்ற காலமாம்.
அதுவே தமிழ்த்தாய் அரசுசெய் நாளாம்.

பாரதி தாசனைப் பலரறிந் திருக்கலாம்.
பாரதி தாசனார் பாடலின் திறத்தைச்
சிலரறிந் திருக்கலாம்; சிலர்க்கவர் யாரெனத்
தெரியா திருக்கலாம்! உண்மை என்னெனின்
பாரதி தாசனார் பைந்தமிழ்ப் பாக்களை
ஊரறி யும்படி விட்டுவிட் டோமெனில் —
மூவா யிரமாண்டு முக்காடு போட்டுச்
சாவா மலும், இரு கண்விழி யாமலும்
தூங்கிக் கிடக்கும் தமிழனின் தொடையில்
கயிறு திரிப்ப தெப்படி? அதன்பின்
வயிறு கழுவுவ தெப்படி நாமெலாம்?
— என்றே ஆரியப் பார்ப்பன முதலைகள்

www.thamizham.net - Free E book No 7417

பாரதி தாசனார் பாடிக் குவித்த
கோடிக் கணக்கான பாடலை எல்லாம்
திட்ட மிட்டுப் பரவாமல் தடுத்தன.
தில்லிக் கவைதாம் தெரியா திருக்கக்
கொல்லைக் கதவை இறுக்கிப் பூட்டின!
இருபதாம் நூற்றாண் டெல்லை வரைக்கும்
பாரதி யாரே 'மகாகவி' என்று
காவடி எடுத்துக் 'காழ்காழ்' என்றன.
பாரதி யாரைநாம் பழித்திட வில்லை;
பாரதி யாரை, நாம் பகைக்கவும் இல்லை!
பாரதி யார் ஒரு பார்ப்பனன் என்பதால்
பாராறி யும்படிச் செய்தனர் பார்ப்பனர்.
அப்படிச் செய்திட ஆரியப் பார்ப்பானுக்
கெப்படி முடிந்தது என்கின் றீர்களா?
செப்படி யாட்டம் குறளி மாயங்கள்
அவன்அறி வானா? என்கின் றீர்களா?
அப்படி ஒன்றும் அறிவிலான் அலன்அவன்!
இப்படிப் பட்ட அறியாமை யெல்லாம்
தமிழனுக் கிருக்கும் தாழ்ந்த சொத்துகள்!
பார்ப்பான் திறமையோ தனிப்பட்ட திறமை!
ஆர்ப்பரிப் பென்பதோ அணுவிருக் காது!
கொப்படிக் குரங்காய்க் குந்தி யிருப்பான்!
இப்படிப் பட்டதோர் நிலையெதிர்ப் பட்டால்
தப்படி யாக அடித்துத் தள்ளுவான்.
கடுகைக் குன்றெனக் கதைத்துத் தள்ளுவான்
குன்றைக் கடுகெனக் குறைத்துக் காட்டுவான்.
தரையில் கிடப்பதைத் தலைமேல் வைப்பான்.
தலைமேல் வைத்ததைத் தரையில் கிடத்துவான்.
பொய்யும் புரட்டும் போட்டுக் கலந்து
செய்வதை எல்லாம் செய்துவிட் டிதுதான்
தெய்வத் திருவுளம் எனச்சொல்லி நம்மை
நம்பவும் செய்வான்; தான்நம்ப மாட்டான்;
வெம்பச் செய்வான் இனத்தையும் மொழியையும்!
இப்படிச் செய்திட எவையவன் கருவிகள்
தெரியுமா? உங்கட்குத் தெரியினும் சொல்லுவேன்!
புராண வேதங்கள் புகன்ற பொய்க் கதைகள்
சடங்குகள்! சாதிச் சழக்குகள்! மதங்கள்!
செய்தித் தாள்கள்! வானொலி நிலயம்!

www.thamizham.net - Free E book No 7417

பொய்த்துத் தள்ளப் போதா வா, இவை ?
இத்தனைக் கருவியும் அவனுக்குச் சொந்தம் !
செத்த தமிழன் பிழைப்ப தெப்படி ?
அத்தனைத் தமிழனும் அவன் சொல்லும் பொய்களை
ஒத்துக் கொண்டு தான் — ஒன்றிரண் டன்று —
மூவாயிரம் ஆண்டுகள் முடங்கிக் கிடந்தான் !
நாவால் உரைக்கவும் உளமுயிர் நடுங்கும் !
பாரதி தாசனார் பாட்டுகள் ஆரியர்
வேரை அறுப்பன ! விளைவைத் தடுப்பன !
வேதப் புரட்டுகள் தலைவெருட் டுவன !
புராணப் புளுகினைப் புதைத்து மூடுவன !
சாதிக் கொள்கையைச் சாகடித் திடுவன !
மதப்புரட் டுகளை மாய்த்துத் தொலைப்பன !
மூடக் கொள்கைக்குத் தீமூட் டுவன !
தமிழனுக் குணர்வைத் தந்திடும் தணல் அவை !
அமிழாக் கொள்கையை ஆர்க்கும் முரசவை !
வளைந்த கூனை நிமிர்த்தும் வகையின !
குலைந்த அவன்றன் குலத்தை இணைப்பன !
தமிழ்மொழிக் கவைஎரு ! தாழ்ச்சிக்கு நெருப்பு !
அமிழ்ந்த புகழ்ச்சியை அகழ்ந்த, மண் வெட்டிகள் !

பாரதி தாசன் பகர்ந்த மொழியிது :—

" நல்லுயிர் உடம்பு செந்தமிழ் மூன்றும்
நான் நான் நான் " —

பாரதி தாசனார் உரைத்த தூள்இது ;—

" எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள்
தனையீன்ற தமிழ்நாடு தனக்கும் என்னால்
தினையளவு நலமேனும் கிடைக்கும் என்றால்
செத்தொழியும் நாளெனக்குத் திருநாள் ஆகும் ! "

பாரதி தாசனார் நெகிழ்ந்துரைத் ததுஇது :—

" செந்தமிழே ! உயிரே ! நறுந்தேனே !
செயலினை மூச்சினை உனக்களித் தேனே !
நைந்தா யெனில் நைந்து போகுமென் வாழ்வு "

தமிழனைப் பார்த்துச் சாற்றிய மொழியிது,

"தமிழனே! இதுகேளாய்!—உன்பால்
சாற்ற நினைத்தேன் பலநாளாய்!

www.thamizham.net - Free E book No 7417

கமழும்உன் தமிழினை உயிரென ஓம்பு!
காணும் பிறமொழிகளோவெறும் வேம்பு!
நமையெலாம் வடமொழி தூக்கிடும் தாம்பு!
நம்முரிமைதனைக் கடித்ததப் பாம்பு! [தமிழனே]

வந்தவர் வஞ்சகர் தமிழால் செழித்தார்
வாழ்வினில் உயர்ந்தபின் தமிழையே பழித்தார்
நம்செயல் ஒழுக்கங்கள் பற்பல அழித்தார்
நாழுபர்ந்தோம் இந்நாள் அவரஞ்சி விழித்தார்!
[தமிழனே]

தனித்தியங் கும்தன்மை தமிழனுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெல்லாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு
[தமிழனே]

பாவேந்தர் சாற்றிய ஆணை மொழியிது,

தாயின்மேல் ஆணை தந்தைமேல் ஆணை
தமிழகமேல் ஆணை!

தூயஎன் தமிழ்மேல் ஆணையிட்டே நான்
தோழரே உரைக்கின்றேன்.

நாயினும் கீழாய்ச் செந்தமிழ் நாட்டார்
நலிவதை நான் கண்டும்

ஓயுதல் இன்றி அவர்நலம் எண்ணி
உழைத்திட தவறேன்.

தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனை என்
தாய்தடுத் தாலும் விடேன்.

எமைநத்து வாயென எதிரிகள் கோடி
இட்டழைத் தாலும் தொடேன்.

ஆனஎன் தமிழர் ஆட்சியை நிறுவ
அல்லல்கள் வரின் ஏற்பேன்!

ஊனுடல் கேட்பினும் செந்தமிழ் நாட்டுக்
குவப்புடன் நான் சேர்ப்பேன்.

www.thamizham.net - Free E book No 7417

பாவேந்தர் பாடிய பள்ளி எழுச்சி!

ஒண்டமிழ்த்தாய் சிலம்படியின்
முன்னேற்றம் ஒவ்வொன்றும்
உன்முன் னேற்றம்

கண்டறிவாய்! எழுந்திருநீ;
இளந்தமிழா, கண்விழிப்பாய்!
இறந்தொ ழிந்த

பண்டை நலம் புதுப்புலமை
பழம்பெருமை அனைத்தையும்நீ
படைப்பாய்! இந்நாள்

தொண்டுசெய்வாய்! தமிழுக்குத்
துறைதோறும் துறைதோறும்
துடித்தெ ழுந்தே!

உயர் தமிழ்த்தாய் இந்நிலத்தில்
அடைகின்ற வெற்றியெல்லாம்
உன்றன் வெற்றி!

அயராதே! எழுந்திருநீ!
இளந்தமிழா அறஞ்செய்வாய்
நாம டைந்த

துயரத்தைப் பழிதன்னை
வாழ்வினிலோர் தாழ்மையினைத்
துடைப்பாய் இந்நாள்!

செயல்செய்வாய் தமிழுக்குத்
துறைதோறும் துறைதோறும்
சீறி வந்தே!

வாழியநீ! தமிழ்த்தாய்க்கு வரும்பெருமை உன்பெருமை;
வயிற்றுக் கூற்றுக்

கூழின்றி வாடுகின்றார் எழுந்திருநீ இளந்தமிழா
குறைத விர்க்க

ஆழிநிகர் படைசேர்ப்பாய்! பொருள்சேர்ப்பாய்!
ஆக்கு விப்பாய்! [இன்பத்தை

ஊழியஞ்செய் தமிழுக்குத் துறைதோறும் துறைதோறும்
உணர்ச்சி கொண்டே!

உணர்ந்திடுக தமிழ்த்தாய்க்கு வருந்தீமை உனக்குவரும்
தீமை அன்றோ?

பிணிநீக்க எழுந்திருநீ இளந்தமிழா, வரிப்புலியே,
பிற்றை நாளுக்

கணிசெய்யும் இலக்கியம்செய் அறத்தைச்செய்
அழகு நாட்டில்! [விடுதலைகொள்

பணிசெய்வாய் தமிழுக்குத் துறைதோறும் துறை
பழநாட் டானே! [தோறும்

எதுசெய்ய நாட்டுக்கே எனத்துடித்த சிங்கமே!
இன்றே இன்னே

புதுநாளை உண்டாக்கித் தமிழ்காப்பாய் புத்துணர்வைக்
கொணர்வாய் இங்கே!

அதிர்ந்தெழுக! தமிழுக்குத் துறைதோறும் துறை
அழகு காப்பாய் [தோறும்

இதுதான்நீ செயத்தக்க எப்பணிக்கும் முதற்பணியாம்
எழுக நன்றே!

புரட்சிப் பாவலர் புகட்டிய மறப்பால்
குறட்டை விட்ட தமிழரின் குரலையும்
வறண்ட நெஞ்சையும் நனைத்ததும் தமிழர்
அரண்டு விழித்தனர்; ஆர்த்தெழுந் துருமினர்!
மறந்த தமிழ்நலம் பேணத் தொடங்கினர்!
இறந்த பழம்புகழ் தமிழ்மேல் ஏற்றினர்!
ஆரியப் பகையின் அடிவயிறு கலக்கினர்!
ஏறிய அவர்திறம் இறக்கிக் காட்டினர்!
விழித்த தமிழரின் வீறுற்ற செவிகளில்
மொழித்திறம் மிக்க பாவலர் மொழிந்தார்;

"குறியுற்ற மறவர்களே இப்பணியை முடிப்பதற்கோர்
கூட்டம் வேண்டும்!"

"பேச்சாலும் எழுத்தாலும் பாட்டாலும் கூத்தாலும்
பிறர் உவக்க

www.thamizham.net - Free E book No 7417

ஓச்சுகவே மணிமுரசு! வீதியெலாம் வரிசையுற
உலவா நிற்பீர்!

ஏச்சாலும் எதிர்ப்பாலும் வருகின்ற இன்னலுக்குள்
இன்ப வெள்ளம்

பாய்ச்சாதோ பொதுத்தொண்டு? பைந்தமிழ்க்குச்
பருக வாரீர்!” [செயுந்தொண்டு

தமிழியக்கம் எனும் ஒரு நூல் தாமியற்றித் தமிழர்களைத்
தலைச் செய்தார்
தமிழ்நாமே ஒருவரையிங் கொருவரெனும் விழுக்காட்டில்
தாழ்த்திச் சென்றால்
தமிழுயர்வு காண்பதென்றே? நந்தமிழீர் தமிழொன்றால்
நாமி ணைந்தால்
உமியன்றோ பெரும் பகையும்? உகக்காதோ பெருவெற்றி?
உணர்வீ ரென்றே
பாவேந்தர் குரல்கொடுத்தார் பல பாக்கள் குயிலேட்டில்
பாடித் தீர்த்தார்!
ஈ. வே. ரா. தொடங்குபகுத் தறிவியக்கக் கொள்கைகளை
எடுத்துக் காட்டிச்
சாவேந்துந் தமிழர்க்கோர் கலங்கரையின் ஒளிவிளக்காய்
நின்றார்; அன்னார்
ஈவேந்தி நிற்பதனால் தமிழர்நிலை இமிஇமியாய்
ஏறிற் றின்றே!

தூங்கிக் கிடந்த தமிழர் தோள்களை
வீங்க வைத்தன பாவலர் பாக்கள்!
வாடிக் கிடந்த தமிழர் நரம்பினில்
ஓடிக் கிளர்ந்தது செந்தமிழ்க் குருதி!
அடைத்துக் கிடந்த தமிழரின் உணர்வுகள்
புடைத்துப் பொருமின பாவலர் பாவால்!
பாரதி தாசன் புரட்சிப் பாவலன்!
ஊரதிர் வுண்டதே அன்னவன் உணர்வால்!
மூலை முடுக்கெலாம் அதிர்ந்த தவன்குரல்!

“வையம் ஆண்ட வண்டமிழ் மரபே!
கையி ருப்பைக் காட்ட எழுந்திரு!
குறிக்கும் உன் இளைஞர் கூட்டம் எங்கே?
மறிக்கொணுக் கடல்போல் மாப்பகை மேல்விடு.

www.thamizham.net - Free E book No 7417

நன்மொழிக்கு விடுதலை நல்கிட எழுந்திடு.
பொன்மொழிக்கு நீ புதுமை ஏற்றுவாய்!
மக்களை ஒன்றுசேர்! வாழ்வை உயர்த்துக!
செந்தமிழ்ச் சொல்லால் செயலால் தடம்பெருந்
தோளால் தொடங்குக பணியை''

"சிறுத்தையே வெளியில் வா!
எலியென உன்னை இகழ்ந்தவர் நடுங்கப்
புலியெனப் புறப்படு''

"மனிதரில் நீயுமோர் மனிதன்; மண்ணன்று.
இமைதிற! எழுந்து நன்றாய் எண்ணுவாய்!
தோளை உயர்த்து! சுடர்முகம் தூக்கு!
மீசையை முறுக்கி மேலே ஏற்று!
விழித்த விழியில் மேதினிக் கொளிசெய்!
நகைப்பை முழக்கு, நடத்து உலகத்தை!''

சொற்களா இவை? இல; உணர்வுப் பிழம்புகள்!
எஃகுக் குழம்பில் ஈட்டியைத் தோய்த்துக்
கருங்கற் பாறையில் எழுதிய வரிகள்!
வருங்கா லத்துத் தமிழினத் துக்கும்
தாங்கா வெப்பத் தணல்வரிப் பாக்கள்!
ஈங்கிது நாள்வரை எழுந்திடா உணர்வு!
தமிழர் மடிதுயில் நீக்கிய வெந்தணல்!
இமிழா தவருளத் தேற்றிய மறவரி!
தமிழனின் ஒவ்வொரு குருதித் துளியினும்
அமிழ்ந்து கிடந்த ஆர்ப்பும் உணர்வும்
பாரதி தாசனார் பாக்களால் விம்மின!
வீறு பெற்றன! கோழைமை வீழ்த்தின!
இன்ன எழுச்சியைப் பார்ப்பனர் ஏற்பரா?
என்ன திறமை எனினும், அத் திறமை
ஆரிய நலன்களுக் குதவினால் அன்றோ
"சீரிது; நேரிது; சிறந்த நூலிது;
முன்னோர் எவரும் மொழிந்திடாக் கருத்திது;
பின்னோர் எவர்க்கும் பிழைபடா நூலிது;
இதனை யாத்தவர் மாந்தராய் இருக்கார்.
அதனினும் உயர்ந்த தேவரே ஆவர்!''
— எனும் பல பொய்யுரை இட்டுக் காட்டி

www.thamizham.net - Free E book No 7417

'இனும் பல பேறுகள் எய்துக' என்று
வாழ்த்தி வணங்கிப் பொன்பொருள் கொடுத்து
வீழ்த்துவர் அன்னவர் காலடி? – ஆனால்
பார்ப்பன மரத்தைப் பலகையாய் அறுக்கும்
யாப்பன் றோ, இப் பாவலர் யாப்பு?
ஆரிய மெழுகை அனலிட் டுருக்கும்
சீரிய தன்றோ அன்னவர் செழும்பா!
புராணப் புளுகைப் படைப்படை அரியும்
கருக்கரி வாளன் றோ,இவர் பாக்கள்!
பன்னூ ருண்டாய்ப் பலபட எய்த்தவர்
வல்லூறு கண்ட எலியாய் நடுங்கினர்.
ஆகவே அவர்பா அமுக்கப் பட்டது!
வேகும் நெஞ்சொடு விலக்கப் பட்டது.
என்னினும் தமிழர் இவரால் விழித்தனர்;
பொன்னினும் பொருளினும் மேன்மை என்றனர்!
பாவேந்தர் செய்த ஆரியப் புரட்சி
சாகுந் தமிழரைச் சாகாது காத்தது.
ஆரிய இருளைச் சீய்த்த பாவலர்
நேரிய பிறிதொரு புரட்சியும் செய்தார்.
குமுகாய நிலையினில் தமிழர்கள் குமைந்த
ஒரு புடைத் தீமை உணர்த்திய பின்னை
அரசியல் வலிவால் வடவர்பால் அடிமை
யுற்றுக் கிடந்த தமிழரை நோக்கினர்.
எற்றித் திரிந்திடும் வடவரைச் சாடினர்.

பாவேந்தர் உள்ளம் பாடுதல் கேண்மின்:

"ஆனஎன் தமிழர் ஆட்சியை நிறுவ
அல்லல்கள் வரின் ஏற்பேன்
ஊனுடல் கேட்பினும் செந்தமிழ் நாட்டுக்கு
உவப்புடன் நான்சேர்ப்பேன்."

"செந்தமிழைச் செந்தமிழ் நாட்டைச் சிறைமீட்க
நந்தமிழர் உள்ளத்தில் வையம் நடுநடுங்கும்
வெந்தணல் ஒன்று விரைந்து வளர்ந்ததென்று
குந்திக் குரலெடுத்துக் கூவாய் கருங்குயிலே!"

"எரிகின்ற எங்களின் நெஞ்சுமேல் ஆணை!
இனியெங்கள் ஆட்சியிந் நாட்டிலே."

www.thamizham.net - Free E book No 7417

பாரதி தாசனார் கண்ட கனவிது:

“என் தமிழ் அன்னை துன்பம் நீங்கித்
தூய்மை எய்தித் துலங்குதல் காண்பேன்.
என் தமிழ் நாடு தன்னாட்சி பெற்றுத்
துலங்குதல் காண்பேன்; தமிழர்
நலங்காண் பேன் நான் நானில மீதிலே.”

மொழிவிடு தலையும் இனவிடு தலையும்
பழியிலாப் பாவலர் விரும்பிய கொள்கை!
பாவேந்தர் முழக்கம் தில்லி ஆட்சியை
நடுங்க வைத்தது; வடவரின் நரம்புகள்
புடைத்துத் தெறித்தன.

“வீடெலாம் விடுதலை முழக்கம் மேவுக!
ஊரெலாம் விடுதலை முழக்கம் உயர்க!
காலையில் விடுதலை முழக்கம் காட்டுக!
உண்ணுமுன் விடுதலை முழக்கி உண்க!
உறங்குமுன் விடுதலை முழக்கி உறங்குக!

சிங்கக் குகையினில் நரிக்கிடம் தந்தோம்
செந்தமிழ் நாட்டின் உரிமை இழந்தோம்
பொங்கும் உணர்வால் எழும்தமி ழரசு
போர்தொடங் கிற்றுக் கொட்டடா முரசு”

— என்று பாவலர் முரசு கொட்டினார்.
முடியரசு சேற்றவர் கலங்க முழங்கினார்.
அடிமை விலங்குகள் தெறித்து விழுந்தன.
விடுதலை உணர்வு எங்கணும் படர்ந்தது.
ஆயினும் விடுதலை அரும்பிட வில்லை.
அடிமையைத் தமிழர் சாய்க்கு நாள் எதுவோ,
மிடிமையைத் தமிழர் போக்குநாள் எதுவோ,
தமிழரைத் தமிழரே காட்டிக் கொடுக்கும்
கயமைத் தனங்கள் மாயுநாள் எதுவோ,
தமிழ்முன் னேற்றம் தனக்கெனத் தமிழன்
இணைந்து நிற்கும் இன்பநாள் எதுவோ,
சாதிப் பேய்கள் தலைவிரித் தாடும்
மடமைத் தமிழகம் தன்னிருள் நீக்கிப்
பகுத்தறி வென்னும் பகலவன் நல்லொளி

www.thamizham.net - Free E book No 7417

முகிழ்த்துப் படரும் மொய்ம்புநாள் எதுவோ,
மாந்தர் மனத்தின் ஏற்றத் தாழ்வுகள்
தீண்டத் தகாத் குழுகாயக் கொடுமைகள்
எத்துப் புரட்டுகள் எந்தமி ழகத்தை
விட்டு விலகின என்னுநாள் எதுவோ —
அதுவே தமிழக விடுதலை நாளாம்!
அதுவே ஆரியம் கெடுதலை நாளாம்!
அந்தநாள் நோக்கிய அரசியற் புரட்சியைச்
செந்தமிழ்ப் பாட்டால் பாவேந்தர் செய்தார்.
முன்அவர் செய்த செந்தமிழ்ப் புரட்சியும்
பின்அவர் செய்த அரசியல் புரட்சியும்
இடையிற் செய்த குமுகாயப் புரட்சியும்
கடைசியிற் செய்த இலக்கியப் புரட்சியும்
தமிழுள் ளளவும் தமிழர்க்குத் துணையாம்.
தொழிலா ளர்க்கெனப் பாடிய பாக்கள்
எழில்கொழிப் போடே உளம்இயக் குவன!
பாவேந்தர் கேட்பார் :

சிற்றூரும் வரப்பெடுத்த வயலும்–ஆறு
தேக்கியநல் வாய்க்காலும் வகைப்ப டுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்வி ளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெல்லாம் எவரின் தோள்கள்?
கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை?
பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்கு லத்தைப்
போயெடுக்க அடக்கியமூச் செவரின் மூச்சு?

எப்படிக் கேள்விகள்? செந்தமிழ்க் கணைகள்!
எத்தனைப் பேர்களின் நெஞ்சைத் துளைத்தன?
ஒவ்வொரு சொல்லுமோர் கோடரிப் பிளப்பு!
எத்தனைப் பேர்களின் கல்மனம் பிளந்தது?
பாட்டின் வரிகளில் எத்துணை இரக்கம்?
எத்துணை அக்கறை? எத்துணைத் துடிப்பு?
மேலும் கேளுங்கள் :

சித்திரச் சோலைகளே!–உமைநன்கு
திருத்தஇப் பாரினிலே–முன்னர்
எத்தனைத் தோழர்கள் ரத்தம் சொரிந்தன
ரோ! உங்கள் வேரினிலே!

www.thamizham.net - Free E book No 7417

நித்தம் திருத்திய நேர்மையி னால்மிகு
நெல்விளை நன்னிலமே—உனக்
கெத்தனை மாந்தர்கள் நெற்றி வியர்வை
இறைத்தனர் காண்கிலமே!

தாமரை பூத்த தடாகங்களே! உமைத்
தந்த அக் காலத்திலே—எங்கள்
தூய்மைச் சகோதரர் தூர்ந்து மறைந்ததைச்
சொல்லவோ ஞாலத்திலே!

மாமிகு பாதைகளே! உமைஇப்பெரு
வையமெலாம் வகுத்தார்—அவர்
ஆமை எனப்புலன் ஐந்தும் ஒடுங்கிட
அந்தியெலாம் உழைத்தார்.

எலிகள் புசிக்க எலாம் கொடுத்தே, சிங்க
ஏறுகள் ஏங்கிடுமோ—இனிப்
புலிகள் நரிக்குப் புசிப்பளித்தே பெரும்
புதரினில் தூங்கிடுமோ?

புதியதோர் உலகு செய்யப்
புறப்பட்டார் பாவின் வேந்தர்!
பொதுமையங் கிருந்த தன்புப்
புனிதமங் கிருந்த தாட்சிப்
புதுமையங் கிருந்த தெல்லாம்
புத்துணர் வுற்ற செய்தி!
எதனையிவ் வுலக மெல்லாம்
ஏற்குமோ அதனைச் சொன்னார்!

இதுவரை தமிழில் இல்லா திருந்த
புதிய நினைவுகள்! புதிய கருத்துகள்!
யாப்பிலும் மொழியிலும் எளிமையைக் காட்டிப்
பாப்புனை திட்ட பாவலர்க் கரசர்!
சீதையை இராமனைப் பாடிய பாட்டன்று!
கோதையை மாலினைப் புனையும் கதையிலை!
தமிழ்க்குழு காயம் உலகினில் தழைக்கவும்
தமிழர்க் குள்ளொளி ஏற்றவும் பாடிய
புரட்சிக் கருத்துகள் புனைந்த பாக்கள்!
மருட்சி கொண்டவர் மயக்கம் தெளியச்
செந்தமிழ் தன்னைக் கருவியாய்க் கொண்டு

www.thamizham.net - Free E book No 7417

எந்தமிழ் நாடு செழிக்கப் பாடினர்.
அவரே மொழிவதைக் கேளுங்கள் அன்பரே!

"கவிதை எனக்கொரு கைவாள்—மார்புக்
கவசம் எனக்கு வாய்மை.
புவியினில் தீமைகள் வீழ—நான்
போர்செய்யும் ஓர்படை வீரன்."

இத்தகு பாவலர் ஏற்றம் போற்றிட
எத்தகு புலவரும் ஏற்றம் பெற்றிலர்.
புரட்சிப் பாவலர் நினைவு விழாவில்
திரட்சி யான செந்தமிழ்ச் சொல்மழை
பொழிவித் திடற்கே புலவர் இருவர்
வந்திருக் கின்றனர்; அவரையும் வாழ்த்துவேன்!
எந்தமிழ் மொழியின் ஏற்றம் விளக்கிட
அன்னவர் தம்மையும் யானழைக் கின்றேன்.
என்றன் முன்னுரை இதனொடு முடித்துப்
பின்னுரை யாக இனும்சில பேசுவேன்.
பாட்டுரை செய்கெனக் கேட்டுக் கொண்டதால்
பாட்டால் பாவேந்தர் திறத்தைப் பாடினேன்
கேட்டுக் கொள்ள அணியமாய் இருந்தே
இறுதி நொடிவரை இருப்பீ ராயின்
உரையால் பின்னுரை சொல்வேன்; யாவரும்
இரையாதிருந்து விழாச்சிறப் புறும்படி
அமைந்து கேட்க அன்பினால் வேண்டுவேன்.

தென்மொழி-கடலூர்-1.

[உலகத் தமிழ்க் கழகச் செய்திகள் முழுமையாகத் தொடர்ந்து வரும் ஒரே இதழ்]

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்:	9 உருபா.	10-50 உருபா.	13 உருபா
தனி இதழ் :	75 காசு.	90 காசு.	1 உருபா

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

ஓரிதழுக்கு ஓர் உருபா 50 காசு முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

www.thamizham.net - Free E book No 7417

(முன்னிதழ்த் தொடர்ச்சி)

இயற்கைப் புனைவாளர்கள்

(Architects in Nature)

பேராசிரியர் சாமுவேல் ஆபிரகாம்
விலங்கியற்றுறைத் தலைவர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

எண்காற் சிலந்தி, சிறந்த புனைவாளர்; தலைசிறந்த புனைவாளர் என்றால் அது மிகையாகாது. சிலந்தியின் வலையை ஒரு வண்டியின் உருளுக்கு ஒப்பிடலாம். வண்டியுருளின் நடுவில்குடம் [Hub] உண்டு. குடத்திலிருந்து ஆரைக் கால்கள் (Spokes) செல்லுகின்றன. இந்த ஆரைகளை இணைக்க விளிம்புக் கட்டைகள் உண்டு. சிலந்தியின் வலையிலே ஆரைகள் பல மையத்தினின்று செல்கின்றன.

கட்டிடக் கலைஞர் முதலாவதாகத் தமது உறைவிடத்தை எங்கு அமைக்கலாமென்று திட்டமிடுகிறார். அதேபோல் இயற்கைப் புனைவாளரான சிலந்தி தன் வீட்டை எங்குக்கட்டலாமென்று ஆராய்கின்றது. இரு மரங்களுக்கிடையிலா, இருதந்திக் கம்பிகளுக்கிடையிலா, ஒரு செடி அல்லது மரத்தின் இரு கிளைகளுக்கிடையிலா என்றெல்லாம் பலவாறு எண்ணிச் செயற்படுகின்றது. சிற்றோடையின் இரு கரையிலும் இருக்கும் மரங்களுக்கிடையிலும் சிலந்திப் புனைவாளர் தன் தொங்கு வலையைப் பரப்பி இரையைப் பிடிக்கலாம் இடத்தைத் தெரிந்தெடுத்தபின் அது தன் வலையின் அடிப்படைச் சட்டத்தை அமைக்கிறது. இவ்வடிப்படைச் சட்டம் (Outer or Basic frame work) முக்கோணமாகவோ சதுரமாகவோ அல்லது வேறு உருவமாகவோ இருக்கலாம். ஆனாலும் தொடக்கத்தில் முக்கோணமாகவோ அல்லது நாற்கோணமாகவோ (Quadrangle) இருக்கும் அடிப்படைச் சட்டம் இறுதியில் பல கோணச் சிறையியாகத் (Polygon) தோன்றும். இரு கட்டடிங்கள் அல்லது இரு கிளைகளுக்கிடையே எவ்வாறு அடிப்படையமைக்கிறது என்பதை விளக்க முற்படின், அதுவே ஒரு தனிக் கட்டுரையாக விரியும். இரு மின்னாற்றல் கம்பங்களுக்கிடையே தோரணம் கட்டும் ஒருவன் முதலில் ஒரு கம்பத்தில் ஏறித் தோரணத்தின் கயிற்றைக் கட்டுகிறான். பின்பு அதிலிருந்து இறங்கி, அடுத்த கம்பத்தில் ஏறித் தோரணத்தை இழுத்துக் கட்டுகிறான். சிலந்தியும் தன் அடிப்படைச் சட்டத்தை உருவாக்குவதற்கு இவ்வாறே செயலாற்றுகின்றது. பின்பு ஆரைகள் அமைக்கப்படுகின்றன. மூன்றாவதாகக்

www.thamizham.net - Free E book No 7417

குடம் உருவாக்கப்படுகிறது. சில சிலந்திகள் தங்களுடம்பிலிருந்து வரும் மெல்லிய பட்டு இழையாலான ஒரு திண்டை வைக்கின்றன; சில சிலந்திகளின் வலை நடுவில் வட்டத் துளையிருக்கலாம்.

இறுதியில் அவைகளை இணைக்கக் கூடிய நூல் சுருள் வட்டமாக (Spiral) அமைக்கப்படுகிறது. அச் சுருள் வட்டங்களுக்கிடையே அதிக இடைவெளியுண்டு. இம்முதற் சுருள் வட்டத்தை, நாம் வீடு கட்டும்போது அமைக்கும் சாரக்கட்டுக்கு ஒப்பிடலாம். ஏனெனில், நிலையான இரண்டாவது சுருள் வட்டத்தைக் கட்டுவதற்கு, இடைவெளி மிகுதியாய் உள்ள முதல் நூற் சுருள் வட்டம் அமைக்கப்படுகிறது. பின்னும் கட்டிடம் முடிந்தவுடன் எவ்வாறு நாம் சாரக்கட்டை எடுத்து விடுகிறோமோ, அவ்வாறே வலை முற்றுப் பெற்றவுடன், முதற் சுருள் வட்டமாகிய சாரக் கட்டைச் சிலந்தி சிதைத்து விடுகிறது.

சிலந்தியின் வலையை உண்டு பண்ணப் பயன்படும் பட்டு நூலைப் பற்றிச் சிறிது ஆராய்வோம். இந்நூல் சிலந்தியின் வயிற்றுப் பாகத்திலுள்ள அறுவகைச் சுரப்பிகளால் உண்டாக்கப்படுகிறது. சுரப்பியிலிருந்து வெளியேறும் பாய்மம் காற்றில் உலர்ந்து நூலாக மாறுகிறது. ஒருவிதச் சுரப்பியிலிருந்து வரும் நூல் அடிப்படைச் சட்டத்துக்கு அடிகோலப் பயன்படும். இன்னொரு வகைச் சுரப்பி யுண்டாக்கும் நூல் சுருள் வட்டத்தை யுண்டாக்கப் பயன்படுகின்றது. பிறிதொரு சுரப்பி அடிப்படைச் சட்டத்தின் நூல்களை ஒட்ட வைக்கும் பிசினைச் சுரக்கிறது. தோட்டத்தில் காணப்படும் சிலந்தி வலையில் ஏறக்குறைய முப்பது திருகு சுருள்களும் [Spirals] இருபது முதல் நாற்பது ஆரைகளும் இருக்கலாம் என்கின்றனர்.

ஆகவே, ஒரு பெரிய கட்டிடக் கலை வல்லுநரைப்போல், சிலந்தி என்ற புனைவோன் தன் வினையைச் செவ்வனே செய்தல் வேண்டும், குறித்த கால அளவிலும் முடித்தல் வேண்டும். சிலந்தி வலையின் அடிப்படைச் சட்டம், குடம், ஆரைகள், திருகு சுருள்கள் முதலியன காலை ஐந்து மணிக்குள் தொடங்கி இருபது நிமையங்களில் முடிதல் வேண்டும்.

கொறிக்கும் விலங்குகள் [Rodents] எலி, முயல் போன்றவற்றின் புனைவுக் கலையைச் சற்று நோக்குவோம். ஒரு வகை எலி (Mole Rat) பூமிக்கடியில் ஏறத்தாழ இரண்டரை அடி ஆழத்தில்

www.thamizham.net - Free E book No 7417

வட்டக் குழி தோண்டி அதில் "வாழும்" இயல்புடையது. இக்குழியி லிருந்து செல்லக்கூடிய ஒரு நீள அடிநிலப் புழை வழியை அது தோண்டுகிறது. இதன் நீளம் எலி வாழும் இடத்தைப் பொறுத்தது. சில இடங்களில் அடிநிலப் புழை வழி ஏறத்தாழ அறுபதடி நீளங் கூட இருக்கலாம் என்கின்றனர். மேற்சொன்ன குழிகளைப் பற்றி நிலத்தின் மேற்பரப்பிலே எவ்வகை அறிகுறியும் தெரியாது. இந்நீண்ட அடிநிலப் புழை வழியிலோ அல்லது அதன் பக்கத் திலோ சிறு வட்டக் குழிகள் தோண்டப்படுகின்றன. இக்குழிகள் தாம் கூலங்களைச் சேர்த்து வைக்கும் கருவூலங்களாகும். பயிர் விளைவு குறைந்து வற்கடம் வருங்கால், பசியால் நலியும் மக்கள் இக்குழிகளைத் தோண்டி அவற்றிலுள்ள கூல வகைகளை எடுத்துக் கொள்வார்கள். இவ்வெலிகளுக்குப் படுக்கையறையாகப் பயன்படும் பிற குழிகளும் உண்டு. நெருக்கடியான காலத்தில் படுக்கறை யிலிருந்து தப்பியோடப் பல சுருங்கைகள் (Bolt Holes) உண்டு. இச்சுருங்கைகள் வெளியுலகில் திறக்கின்றமையால், இவ்வெலிகள் எளிதில் தப்பியோட இயலும். இவ்வினத்தைச் சேர்ந்த இன்னொரு வகை எலி, மலங்கழிக்கும் குழிகளையும் தன் வளையிலே தோண்டி வைத்துக் கொள்ளுகிறது. என்னே வியப்பு! மக்களிடத்தும் இத்தூய்மை யுணர்ச்சி யுண்டா? எலிகளின் இருப்பிடத்திலே இத்தனை வசதிகளா?

இங்கிலாந்து நாட்டிலே அறுவடைச் சுண்டெலிகள் (Harvest Mice) இருக்கின்றன. பிடிபந்து [Cricket Ball] அளவுள்ளது அவற் றின் கூடு. இக்கூடு வயலில் வளரும் பயிர்களின் தண்டிலே இலை களாலும் புல்லாலும் கட்டப்படுகின்றது. கோதுமை அல்லது மக்காச் சோளத் தட்டையில் ஏறித் தண்டோடு தொடர்புள்ள, உயிரு டைய பச்சை இலைகளைத் தன் கைகளால் (முன் கால்களால்) பிடித்துக் கொண்டு, தனது பற்களால் அவ்விலைகளை நீள வசமாகச் சிறு பாகங்களாகக் கிழிக்கின்றது. இவ்வாறு கிழிக்கப்பட்ட இலைகளை வைத்து, ஒரு கூடு உண்டாக்குகிறது அச்சுண்டெலி. ஈண்டு வியத்தக்க உண்மை ஒன்றுள்ளது. இக்கூண்டுக்குத் தனி நுழை வாயிலோ பலகணியோ இல்லை ஆனாலும் இச்சுண்டெலி கூட்டிற் குள் நுழைந்தாலும், அல்லது வெளிப்போந்தாலும் கூண்டின் இலை கள் தாமாகவே மூடிக்கொள்ளும் வண்ணம் அமைந்துள்ளன. இவ் வாறு வெளியேறினும் உட்புகினும் தாமாகவே மூடிக்கொள்ளும்படி

www.thamizham.net - Free E book No 7417

அவ்விலைகளை அமைக்குந் திறன் இச்சுண்டெலிகளுக்கே உரிய தனிச் சிறப்பாகும்.

நிலமுனைக் காடியின் இருப்பிடம் நமக்கு மிகப் பெரிதும் இறும்பூதூட்டும். பெண் காடி குட்டியீனும் சமயத்தில் பனிக்கட்டியில் வட்டக் குகை யொன்றை யுண்டுபண்ணுகிறது. அக்குகைக்குள் தங்கும் அறையொன்றும் படுக்கையறை யொன்றும் அமைக்கப்படுகின்றன. இப்படுக்கையறை பெண் காடியின் பேறு கால இடமாகும். பேறு கால அறைக்குள் மிகுந்த குளிர் காற்று வாராதபடி ஓர் அரைவட்டச் சுவரையும் உண்டாக்கிக் கொள்ளுகிறது அக்காடி.

இயற்கையன்னையின் இன்னொரு பொறியைப் பற்றிப் பார்ப்போம். இவர் அணை கட்டி நீரைத் தேக்குவதில் தனிப் பயிற்சியுள்ளவர். இவர் பெயர், கொறிக்கும் இனத்தைச் சேர்ந்த பீவர் (Beaver) என்பது. இவ்வெலி முற்காலத்தில் ஐரோப்பாவின் பல நாடுகளிலும் வட அமெரிக்காவிலும் வசித்து வந்தது. இன்று நார்வே, டான்யூப் ஆற்றங் கரை, கானடா போன்ற பகுதிகளில் வாழ்க்கைக்குப் போராடிக்கொண்டிருக்கிறது. ஏனெனில் இவ்வினத்தின் மென்மயிர்த் தோலுக்காக மக்கள் ஏராளமாக இவற்றைக் கொன்று வருகின்றனர். இவ்வெலிகள் தாம் வாழும் ஆற்றின் நீர் ஒரே ஆழமுடையதாயிருக்க அதன் குறுக்கே ஓர் அணையை அமைக்கின்றன. முதலில், அணையைக் கட்ட ஓரிடத்தைத் தெரிந்தெடுத்துப் பின்பு அணையைத் தாங்க ஏதாயினும் மரமிருந்தால் அதை விட்டு விட்டு, மற்ற மரங்களைக் கீழே விழ்த்துகின்றன.

அவற்றிலிருந்து இரண்டு அல்லது மூன்றடி நீளமான சிறு கட்டைகளை உருவாக்குகின்றன. இவை ஆற்றின் குறுக்கே வைக்கப்படுகின்றன. இவற்றிற்கிடையில் சிறு கட்டைகள் குச்சிகள் திணிக்கப்படுகின்றன. இடைவெளிகள் இருந்தால் களிமண் பூசப்படுகின்றது. இப்படி அணை அமைக்கப்பட்டபின், ஒரு சிற்றோடை 150 அடி நீளமும், 45 அல்லது 60 அடி அகலமும் உள்ள ஓர் ஏரி போல் காட்சியளிக்குதாம். இவ்வாறு அணைகட்டுவதால் அவை வசிக்கும் நீர்நிலையில் ஆழம் மிகுதியாக இருக்கும். அப்போது, பகைவர் வந்தால் வளையில் ஓடி ஒளிந்து கொள்வது எளிதாகும்.

www.thamizham.net - Free E book No 7417

இவ்வணைகள் மக்களுக்கும் ஒரு வழியில் பயன்படுகின்றன. இவை சிற்றோடைகளில் பாயும் நீரைத் தடுக்கின்றன. ஆகையால் இவ்வணைக்கு அப்பால் வெள்ளப் பெருக்குக் கிடையாது. 'மக்கள் இவ்வரிய தொண்டு செய்யும் வாயில்லாப் பொறியியலறிஞர்களை இரக்கமின்றிக் கொன்றமையால் வெள்ளம் தடுத்து நிறுத்தப்படுவதில்லை. ஆகையால் வெள்ளம் கரை புரண்டோடி சிற்றூர்களையும் அழித்துவிடலாம். பின்னும், நீர் வெள்ளமாக ஓடும்போது பயிர் செய்ய இன்றியமையாததான நல்ல மண்ணையும் அடித்துச் சென்று விடுகின்றது. ஆகவே, இவ்வியற்கைப் புனைவாளரின் வாழ்க்கை

"உருவுகண் டெள்ளாமை வேண்டும்; உருள் பெருந்தேர்க்(கு)
அச்சாணி யன்னார் உடைத்து"

என்ற வள்ளுவரது பொன்மொழிக்குப் பொருள் சொல்லுவது போல் அமைந்துள்ளது

திருமூலர் சித்த மருத்துவ நிலையம்

O ஆயிரக்கணக்கான ஓலைச் சுவடிகளில் பொதிந்து கிடந்த பண்டைத் தமிழ் மருத்துவத்தின் அரிய வெளிப்பாடு!

O எந்த வகை நோயாயிருந்தாலும் அஞ்ச வேண்டா. கை கால் முடக்கம், இழுப்பு, கணை, ஈரல் கட்டி, சோகை, காமாலை, மாந்தம் முதலிய குழந்தை நோய்களையும், நெஞ்சாங்குலைவீக்கம், மாரடைப்பு (Heart - Failure), உறுப்பு முடக்கம், புற்று (Cancer), குருதிக் கொதிப்பு, சிறு நீரில் உப்பு, சருக்கரை, ஈளை, எலும்புருக்கி (T. B.) முதலிய எண்ணற்ற முதியோர் நோய்களையும் உடனடியாகக் குணப்படுத்துகின்றோம்.

O பெரிய பெரிய ஆங்கில மருத்துவர்கள் கைவிட்டிருந்தாலும் சரியே – ஒரு முறை நேரில் அணுகுங்கள்.

மருத்துவர் க. சரசுவதி கண்ணப்பர்,
(பாவேந்தர் பாரதிதாசன் மூத்தமகள்)
38, நேதாசி சாலை, மஞ்சக்குப்பம், கடலூர்-1.

www.thamizham.net - Free E book No 7417

(முன்னிதழ்த் தொடர்ச்சி)

தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்
ஆய்வுக் கட்டுரை :

தமிழின் பழைய வரிவடிவும் அதன் புதிய ஒலிவடிவும்

"THE OLD TAMIL SCRIPTS AND ITS REFORMED NEW SOUNDS"

பேராசிரியர். மு. உலகநாதன்.

மாற்றம் :-

எனவே ஐந்து குறில்களில் இரண்டு எழுத்துக்களில் மட்டும் காரணத்தோடு ஒரு மாற்றம் செய்துள்ளேன்.

அ

இ

உ

ெஎ (எ)

ெஒ (ஒ)

இவ்வாறு 'ஔ" என்பதற்கு பின்னால் ளகரத்தைக் கொண்டதுபோல் எகரத்தின் முன் ஒன்றும் ஒகரத்தின் முன் இரண்டுமாகிய ஒரு சுழிக் கொம்பை இடுக.

எனவே இவற்றின் நெடுமை

அா, இா, உா, ெஎா, ெஒா ஆகும். ஏன் இந்த மாற்றம்?

ஏன் :—

க்அ – க என்னும்போது தோன்றிய உயிர்மெய் புள்ளி மட்டும் நீங்கி அகர ஓசை பெற்றது அகரவடிவில்லை. அகரமோடு உயிர்த்தல் இலக்கிய முறை. அதனை அப்படியே கொள்வோம்.

க்ஆ – கா இதனில் ஆகார ஓசையிருப்பினும் ஆகார வடிவு சிறிதும் இல்லை.

க் அா – கா என்று கொண்டால் அகரம் காலைப்பெற்று ஒரு சிறிதாவது தன் வடிவில் இருக்கிறது. அம்மட்டில் மகிழ்ச்சி; மாற்றம் சரிதானே?

க் இ – கி இதனில் 'கி'யின் மேல் விலங்கு ஓரளவு நிறைவு தருகிறது.

www.thamizham.net - Free E book No 7417

க்ஈ - கீ இந்நூலில் உயிரின் வடிவிற்கும் உயிர் மெய்யின் தோற் றத்திற்கும் சம்பந்தமே இல்லை.

க் இா - கிா எவ்வாறு பொருத்தம் பார்த்தீர்களா ? ‘ இ ’யின் மேல் வளைவும் காலும் வந்துள்ளன.

க்உ - கு அவ்வளவு நிறைவு தரவில்லை.

க் உா - குா பொருந்துகின்றதல்லவா ?

க்எ - கெ. பொருத்தமே இல்லை.

க் எா - கே. ஏற்றுக் கொள்ள இடமிருக்கிறது. எனவேதான் ‘ எ ’யின் முன்னால் ஒரு சுழிக் கொம்பைப் புதிதாகச் சேர்த்துள்ளேன்.

க் எா (ஏ) - கொ (கே) புதிய ஒலி வடிவும் வரி வடிவும் ஏற் படுகின்றன.

இது இன்றைய 'கொ'வைப் போல இருப்பினும் கே என்றே உச்சரிக்கப்பட வேண்டும்.

க்ஒ கொ - புதிய (கொ)வோடு வரி வடிவில் ஒன்றுபடுகிறது. எனவே அதிலிருந்து இக் ‘ கொ ’ விலக்கப்பட வேண்டும்.

க்ஐ - கை (கொ) புதிய ஒகர ஓசையும் வரி வடிவும் ஆக்கப் பட்டுள்ளன.

க் ஔ - கௌ (கோ) புதிய ஓகார ஓசையும் வரி வடிவும் காட்டி யுள்ளேன். புதுமையாய்த் தானிருக்கும்; இருப்பினும் மனத்திற் கொள்க.

எதற்கு ?

எதற்காக இவ்வாறு செய்யப்படுதல் வேண்டும்? கால் (ா) என்னும் குறியே நெடுமையை எல்லா இடத்தும் உணர்த்துவதாகக் கொள்வதற்காகத் தான் .கீ, கூ, யூ என்பன போன்ற நெடுமையை உணர்த்தும் வரி வடிவங்களும் இரண்டு சுழிக் கொம்பும் அடிபட்டுப் போகின்றன. ஏன்? ஈகார ஓசையில் 18 வடிவங்களும், ஊகார ஓசையில் 18 வடிவங்களும். ஏகார ஒகார ஓசைக்குரிய 36 வடிவங்க ளும், ஆக 72 வரி வடிவங்கள் விலக்கப்படுகின்றன. சுழிக் கொம் பையும் ஈகார ஓசை மேல்விலங்குகளையும் சேர்த்தால் 74 வரி வடிவம் நீங்குகின்றது.

கேள்வி :

காலை (ா) இவ்வாறு எல்லாவற்றிற்கும் எப்படி வேறுப்பட்ட ஓசைகளுக்குப் பயன்படுத்தலாம் என்று கேட்கலாம்.

www.thamizham.net - Free E book No 7417

அக்கால் ஐந்து குற்றெழுத்துகளில் ஏற்கெனவேயே இரண்டு எழுத்துகளில் பயன்பட்டு இரண்டு வகையான ஓசை தருகிறது.

இரண்டு வகை :-

ஆகாரத்தோடு சேர்கின்றபோது க் ஆ "கா"வென ஆகார ஓசையும் ("காடு"), ஓகாரத்தோடு சேர்கின்றபோது க்ஓ "கோ"வென ஓகார ஓசையும் தருகிறது ("கோடு")

எனவே தான் இகரத்தோடும் உகரத்தோடும் எகரத்தோடும் சேர்த்து, இா, உா, ொ (கிா, குா, கொ (கே) என்னும் மூன்று புதிய ஓசைகளை இ, உ, எ, ஆகிய மூன்று வரி வடிவிற்கும் சேர்த்துக் கொண்டேன்.

காலின் தேவை :-

எனவே காலானது (ா) அ, இ, உ, ெ, ெெ என்ற ஐந்து எழுத்துக்களோடும் சேரும். சேரும்போது அவ்வெழுத்தின் ஓசையே பெறும் என்று பொது முறையை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும்

தமிழ் மொழியின் வரி வடிவம் கீழ்க்கண்டவாறு அமைந்துள்ளது :—

வடிவெழுத்துகள்

1.	உயிரெழுத்து	(அ-ஓ)	11
2.	மெய்யெழுத்து	(க்-ன்)	18
3.	அகர உயிர்மெய்	(க-ன)	18
4.	இகர உயிர்மெய்	(கி-னி)	18
5	ஈகார உயிர்மெய்	(கீ-னீ)	18
6.	உகர உயிர்மெய்	(கு-னு)	18
7.	ஊகார உயிர்மெய்	(கூ-னூ)	18
8.	ணூ, ஞூ, ரு, ஊண, ஊன, ஊல, ஊள		7
9.	உயிர்க்குறி (ா, ெ, ே, ை)		4
10.	ஆய்தம் (ஃ)		1
			131

குறிப்பு :— ஒ ள - ஔ ஆவதால் உயிர் வடிவம் 11 எழுத்தாகக் கூறப்பட்டது.

[தொடரும்]

www.thamizham.net - Free E book No 7417

செய்தியும் அறிக்கையும்

செய்தி எண்: உ. த. க. 7/2000

கீழ்க்காணும் ஊர்களிலும் நகரங்களிலும் உலகத் தமிழ்க் கழகக் கிளைகள் தொடங்கப்பெற்றுச் செயற்பட்டு வருகின்றன. ஆங்காங்குள்ள அன்பர்கள் விரும்பின், அவற்றில் உறுப்பினர் ஆகி, நாட்டுத் தொண்டும் மொழிப்பணியும் புரியுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

௧. மதுரை மாவட்டம்

மதுரை நகரக்கிளை:- தொடக்கம்: 15-6-69. தலைவர்: திரு. நெடுஞ்சேரலாதன்; செயலர்: திரு. பொன். மாறன்; பொருளர்: திரு. ச. ஆறுமுகம், வணி. இ.

௨. தென்னார்க்காடு மாவட்டம்

கடலூர் நகரக்கிளை: தொடக்கம்: கடகம்–௨௬ தலைவர்: புலவர் திரு. ஆ. கண்ணப்பர்; செயலர்: திரு. கு. ஐந்தெழுத்தன், க. இ., கீ. க. இ.; பொருளர்: புலவர். இரா. திருமாறன்.

௩. முகவை மாவட்டம்

(அ) கொ. வலசை ஊர்க்கிளை:- தொடக்கம்: 29 6-69 தலைவர்: திரு. ஆணையாளர்; செயலர்: திரு. வளவன்; பொருளர். திரு. அருளரசன்.

(ஆ) கொட்டகுடி ஊர்க்கிளை – தொடக்கம்: ஆடவை–௧௧. தலைவர்: திரு. ந. மணிமொழியார்; செயலர்: திரு. மருதுபாண்டியன்; பொருளர்: திரு. கலையரசன்.

(இ) முத்துப்பட்டணம் ஊர்க்கிளை:- தொடக்கம்: ஆடவை–௮ தலைவர்: திரு. இரா. வளன்அரசு; செயலர்: திரு. ச. தேவநேயன்; பொருளர்: திரு. வே. இளமுருகு.

(ஈ) முகவை வட்டக்கிளை:- தொடக்கம்: 9—5—69 தலைவர்: திரு. மும்முடிமுகிலன்; செயலர்: திரு. பழ. வெற்றிவேந்தன்; பொருளர்: திரு. இரா. அறிவுடைநம்பி.

www.thamizham.net - Free E book No 7417

(உ) சேத்திடல் (சேதுநகர்) ஊர்க்கிளை. தொடக்கம்: மேழம்-௨௯ தலைவர்: திரு சேதுமாதவன்; செயலர்: திரு. அருண்மொழிச்செல்வன்; பொருளர்: திரு. தமிழ்மாறன்.

(ஊ) சூரம்புலி ஊர்க்கிளை:- தொடக்கம்: விடை-௬. தலைவர்: திரு. முத்தழகு; செயலர்: திரு. எழிலரசன்; பொருளர்: திரு. அறவரசன்.

௪. கருநாடக மாநிலம்

பெங்களூர் (சீராமபுரம்) நகரக்கிளை:- தொடக்கம்: கடகம்-௩௯ தலைவர்: திரு பொன். மாந்தன் அரிமா; செயலர்: திரு அ. வெற்றிச் செல்வன்; பொருளர்: திரு. க. அரசு.

அறிக்கை எண்: உ. த. க. 6/2000

அ) நம் உ. த. க. ஆட்சிக்குழுக் கூட்டம் கடந்த ஆடவை உ௨-ஆம் பக்கல் (6—7—69) அன்று திருச்சி அசோகா தங்கு விடுதியில் தலைவர். மொழிப்பேரறிஞர். ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது கூட்டத்திற்கு ஆட்சிக்குழு உறுப்பினர்கள் உட்பட 28 பெயர்கள் வந்திருந்தனர். தலைவர் தம் உரையில் கழகத்தில் உட்பகையும் பூசல்களும் களையப் பெறுதல் வேண்டுமென்றும், கழக அன்பர்கள் யாவரும் தமிழ் நலமும் தமிழர் முன்னேற்றமும் தமிழக உய்வும் கருதி ஒன்றுபட்டியங்க வேண்டுமென்றும் குறிப்பிட்டார். பொதுச் செயலாளர் திரு. பெருஞ்சித்திரனார் நம் கழகம் இதுவரை அடைந்துள்ள வளர்ச்சி குறித்தும், சேர்க்கப்பெற்றுள்ள உறுப்பினர்கள் தொகை குறித்தும் விளக்கி, எல்லா மாவட்ட அமைப்பாளர்களும் முகவை மாவட்ட அமைப்பாளர் திரு. தமிழ்க்குடிமகன் அவர்களைப் பின்பற்றிக் கழகத்தை இயன்றவாறெல்லாம் விரிவுபடுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். கழகப் பொருளாளர். திரு செந்தமிழ்க்கிழார் கழகப் பொருள்நிலை மிகவும் கீழ்நிலையில் இருப்பதாகக்கூறி அன்பர்களும் அமைப்பாளர்களும் கழகத்தைப் பொருளால் வலிவுபடுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

இடைவேளைக்குப்பின் கூடிய கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேறின. 1. வரும் சிலை 5, 6-திசம்பர் 20, 21 (காரி, ஞாயிறு) நாட்களில் முகவை மாவட்டத்தில் கழக ஆட்டை விழாவும், திருவள்ளுவர் ஈராயிரமாட்டை விழாவும், திருக்குறள் தமிழ்மரபுரை

www.thamizham.net - Free E book No 7417

வெளியீட்டு விழாவும் ஒன்றாக இணைத்துக் கொண்டாடுதல். 2. கழகத் தணிக்கையாளர்களாகத்திரு.கரிகாலனார், திரு குமரப்பனார் அவர்களை அமர்த்துதல். 3. தலைவர் சேர்ப்புப் படிவத்தில் கூறப்பெற்ற திருத் தங்களை ஏற்றுக்கொள்ளுதல். 4. தலைமைக் கழகப் பொருள் நிலையைச் சரிசெய்யவேண்டி, மாவட்ட, வட்ட கிளைக்கழகங்கள் சார்பாகத் திரட்டப்பெறும் நன்கொடைத் தொகையில் தலைமைக் கழகத்திற்குக் குறைந்தது 10 விழுக்காடு விடுக்கப்பெறுதல் வேண்டும்.

இறுதியில் துணைச்செயலாளர் திரு. இறைக்குருவனார் நன்றி யுரைக்குப்பின் கூட்டம் மாலை 5-மணியளவில் சிறப்புற முடிவுற்றது.

ஆ) மாவட்ட அமைப்பாளர்கள் வட்ட, கிளைத்தலைவர்கள்கவனிக்க:

1. மாதவிளத்த அறிக்கைகள் மாதந்தொறும் கட்டாயம் விடுக் கப்பெறுதல் வேண்டும். இரண்டு மூன்று மாதங்கள் தொகுத்து விடுப் பதோ, ஒன்றிரண்டு அறிக்கைகளை மட்டும் விடுப்பதோ தவறாகும் என்பதை நினைவிற் கொள்க.

2. கிளைக்கழகங்கள் உறுப்பினர் படிவங்களை மாவட்ட அமைப் பாளர் தம் கையொப்பங்களுடன்தாம் தலைமைக் கழகத்திற்கு விடுத் தல் வேண்டும். முந்தைய அறிக்கைகளை அன்பர்கள் கவனிப்பார் களாக.

இ. மாவட்ட அமைப்பாளர்களுக்கு:

திசம்பரில் நடைபெற விருக்கும் உ. த. க. மாநாட்டிற்குள் முகவை மாவட்டம் நீங்கலாகப் பிறமாவட்ட அமைப்பாளர்கள் எல் லாரும் தம்தம் மாவட்டத்திற்குள் குறைந்தது இருபது கிளைக்கழகங் களையும் இரண்டு வட்டக் கழகங்களையும் தோற்றுவிக்க எல்லா வகை யான முயற்சியிலும் ஈடுபடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஈ. பொறுப்பு மாற்றங்கள்:

1. கோவை மாவட்ட அமைப்பாளராக இதுவரையிற் பணி யாற்றி வந்த திரு. கா. இளமுருகனார் பல புதிய பொறுப்புகளின் காரணியமாகத் தம் மாவட்ட அமைப்புப் பொறுப்பை திரு. ப. கு. முருக வேள் (பு. புளியம்பட்டி மறைமலையடிகள் மன்ற உறுப்பினர்) அவர் களிடம் ஒப்படைத்துள்ளார்.

2. தெ. ஆ. மாவட்ட அமைப்பாளர் புலவர் அரிமதி. தென்ன கனார் செயல் விரைவு கருதித் தம் மாவட்டப் பொறுப்பை திரு. த. மொழிக்கரசு ('குறளகம்' 32-சிதம்பரம்சாலை, வட்டம்-8. நெய்வேலி-1) அவர்களிடம் ஒப்படைத்துள்ளார்.

அன்பர்கள் இனிப் புதிய மாவட்ட அமைப்பாளர்களிடமே தொடர்பு கொள்ள வேண்டிக்கொள்கின்றேன்.

மே/பா. தென்மொழி, கடலூர்-1. பெருஞ்சித்திரன், பொதுச்செயலாளர், உலகத்தமிழ்க்கழகம்.

www.thamizham.net - Free E book No 7417

O தென்மொழி நலமில்லாததை கண்டு முன்னர் அதிர்ச்சியுற்று, படித்து முடித்த பின்னர் சிந்தித்தேன் தமிழினத்தின் உறவால், மெய்யுணர்வால் உள்ளும் புறமும் கலந்து ஒன்றாகி விட்டீர்கள் தாங்கள்! அந்நிலையில் தாங்கள் நலமில்லை என்னும்போது தங்களோடு பிணைந்து, இணைந்து வாழ இயலாது பிரிந்து பல கற்களுக்கு அப்பால் வாழும் எம்போன்ற தமிழ் நெஞ்சங்கள் மட்டும் நலமாயிருக்க இயலுமா? விரைவில் தோளோடு தோள் நின்று துணைபுரிய வாய்ப்பினை எதிர்நோக்கியுள்ளோம்.

— க. கார்முகில், ம. பாரி, கருவூர்.

O தங்களின் "தென்மொழி"யின் மீது அளவற்ற, உணர்ச்சி மிக்க பற்றினை வைத்துள்ளேன். என் நண்பர்களிடத்து நூலினைப் பற்றியும், இவ்வியக்கக் கொள்கையினைப் பற்றியும் கூறி மகிழ்வேன். மகிழ்வார்கள். இருந்தும் "தென்மொழி" அடைந்துவரும் இன்னல்களை எண்ணியும், சில போலித் தமிழர்களின் கீழ்நிலையினைக் கண்டும் எனதுள்ளம் துயரமடைகிறது. "நமக்கு வந்த மடல்" பகுதியில் நமதன்பர்கள் எழுதும் ஒவ்வொரு மடலும் என்னை உணர்ச்சி வயப்படச் செய்கிறது. உள்ளத்தில் எழுச்சியை ஊட்டுகிறது. தங்களின் தமிழ்த் தொண்டிற்கும், தென்மொழியின் பணிகளுக்கும் பயனாக எதிர்காலத்தில் "நமதியக்கம்" சிறப்புறுமென்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

— வீ. ஞானசேகரன், முத்துப்பேட்டை.

O தங்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களையும், ஈடு இணையற்ற துன்பங்களையும் நினைத்து வருத்தமுற்றேன். துன்பத்தின் இறுதி இன்பம் என்பதை எண்ணி இடுக்கண்களை எண்ணாமல் தொடர்ந்து பணியாற்றுங்கள்.

— ச. வள்ளி மணாளன், திருக்குறுங்குடி.

O விடைத்திங்கள் தென்மொழி விளக்கம் கல்நெஞ்சக்காரரையும் கரைய வைக்கும். ஒரு கணம் நினைவிழந்தேன். செயல் மறந்தேன். தங்களின் "அன்றாடங் காய்ச்சி" வாழ்க்கையை அகக் கண்ணால் நினைத்துக் கண்ணில் நீர் மல்கத் துயரமடைந்தேன். ஒவ்வொரு தமிழுள்ளமும் தன்னால் இயன்ற அளவு பொருளுதவி செய்து பொருளினைறித் தாழ்ந்த தென்மொழியைத் தலைதூக்கச் செய்வது தமிழ் நெஞ்சங்களின் தலையாய கடமையாகும். தமிழுக்காகத் தன்னையே இழந்த தமிழ் நெஞ்சத்திற்குத் தன்னால் இயன்ற அளவு உதவி செய்து காக்க வேண்டுமெனத் தமிழ்க் குமுகாயத்தை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

— சி. இராசு, சென்னை-14.

O சென்ற இதழ் கண்டு பெரு வருத்தம் அடைந்தேன். இத்தனை யாண்டுகளாக எத்தனைபோ எண்ணற்ற தமிழர்களுக்குத் தமிழுணர் வூட்டித் தலை நிமிரச் செய்தது தென்மொழி! ... செய்கிறது! செய்யும்! ... விரைவில் முழு நலமடைந்து சிறந்ததோர் இதழாக விளங்குதல் திண்ணமே! காலங்கடந்து பழுப்புத் தாளில் வெளி வருவது பற்றி வருந்த வேண்டியதில்லை.

— நத்தம் இளஞ்சித்திரன்.

www.thamizham.net - Free E book No 7417

முகவர்கள், உறுப்பினர்கள், அன்பர்கள் கவனிக்க.

முகவர்களுக்கு...!

தென்மொழி ஒவ்வொரு மாதமும் குறித்த நாளில் வெளிவரவில்லை என்பதை நான் ஒப்புக்கொள்கின்றேன். ஆனால் விடுத்த இதழ்களை விற்று ஒரு மாதத்திற்குள் நீங்கள் பணம் விடுக்கவில்லையானால் அடுத்த இதழை எப்படி அச்சிட முடியும்? பிற இதழ்கள்போல் தொடர்ந்த நான்கு இதழ்களை அச்சிடும் வாய்ப்பா நம் அச்சகத்தில் உள்ளது? இன்றைய நிலையில் முகவர்களிடமிருந்து நமக்கு வரவேண்டிய நிலுவைத் தொகை ஏறத்தாழ 2000 உருபா. இந்தப் பணம் நம் கையிலிருந்தாலன்றோ உங்களைப் பற்றி நாங்கள் கவலைப்படாமல் இருக்க முடியும். உண்மையாகவே சொல்கின்றேன்; எண்ணிப் பாருங்கள். உங்களிடம் கடுமையாகவும் நடக்க எங்களால் முடியவில்லை; அன்பாக நடக்கவும் நீங்கள் எங்களை விடவில்லை. உங்களை வேண்டிக் கொள்வதெல்லாம் முன்மாதப் பணத்தை மறுமாதத்திற்குள் (நினைவூட்டறிக்கை வந்தவுடன்) விடுத்துவிடுங்கள் என்பதுதான். தென்மொழி வாணிகத்திற்காகவா நடத்தப்பட்டு வருகின்றது? அதற்கு நீங்கள்தாமே தூண்கள். உங்கள் ஒத்துழைப்பின்றித் தென்மொழிப் பணி எவ்வாறு நடைபெறும்?

உறுப்பினர்களுக்கு...!

நீங்கள் தென்மொழியை வாங்கிப் படிப்பது நன்றிக் குரியதே. ஆனால் ஒவ்வொரு மாதமும் உங்கள் அன்பர்களில் ஒருவரையாகிலும் உறுப்பினராக்க முயற்சி செய்தால் எவ்வளவு பயன் பெருகும்! நம் அன்பர்கள் வேண்டாத வழிகளில் எவ்வளவு பணத்தை வீணடிக்கின்றார்கள்? அவர்கள் சென்ற வழியில் செலவிடாது தீதொரீஇ நன்றின்பால் உய்ப்பதுதானே நல்லது? ஒவ்வொரு மாதமும் குறைந்தது ஐம்பது புது உறுப்பினர்கள் சேர்ந்தாலும் தென்மொழிக்கு எவ்வளவு ஆக்கமும் ஊக்கமும் பெருகும்? எண்ணிச் செயல்படுக!

அன்பர்களுக்கு...!

இதழை விலைக்கு வாங்கியே படித்துக்கொள்ளலாம் என்று நீங்கள் இருத்தல் வேண்டா. இரவல் வாங்கியாகிலும் படித்து விடலாம் என்ற நினைவும் வேண்டா. உங்களால் மாதம் 75 காசு செலவிடுவது எளிதெனின், ஆண்டுக்கு 9 உருபா செலுத்துவது முடியாதா? நாங்கள் முகவர்களையே நம்பியிருப்பதற்கு உங்களைப் போன்றவர்கள் தாமே காரணியம்? அருள்கனிந்து கொஞ்சம் நினைத்துப் பாருங்கள். நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதமும் ஒவ்வோர் உறுப்பினரைச் சேர்த்தால் நம் அன்பர்களின் எண்ணிக்கை மாதத்திற்கு மாதம் 100, 200, 400, 800, 1600 என்று பெருகாதா? இப்படியிருந்திருந்தால் ஓராண்டிற்குள் இத்தொகை 2,04,800 (இரண்டு இலக்கத்து நான்காயிரத்து எண்ணூறு) என்று பெருகியிருக்காதா? நாம் வாளாவிருப்பதால் நம் பணிகளில் ஏற்படும் சுணக்கம்–இழப்பு எவ்வளவு பெரிது? கருதிப்பாருங்கள். கணக்குப் போட்டுக்கொண்டு முனைந்து பாருங்கள். ஐந்தே ஆண்டுகளில் இத்தமிழகம் முழுவதற்கும் உணர்ச்சியூட்டிவிட நம்மால் முடியும்! இன்றே தொடங்க வேண்டுகின்றோம் (ஆ-ர்)

தென்மொழி மின் அச்சகம். கடலூர்-1.

www.thamizham.net - Free E book No 7417